23
கொலைஞன்

இருட்டுக்குள் படுத்திருந்தாள் சகுந்தலா. அழுது அழுது கண்களில் கண்ணீர் இல்லை. கல்யாணம் ஆகி வந்த ஒரு வருஷத்துல ஏறத்தாழ பத்து வீடு மாற்றியாகி விட்டது. அவமானம் தாங்கமுடியாமல் போய் விடுகிறது. எந்த வீட்டில் போய் தங்கினாலும் இரண்டு வாரம் கூட இருக்க முடியாது. ஆம்பிள்ளை இல்லாத வீட்டில் எப்படி இருக்கிறது. தரங்கன் ஆனி என்னவோ ஆச்சரியப்படும் படியான பலத்துடன் பார்க்க ராஜா போல் இருந்தான். மன்னார்குடிக்கு அந்தப் பக்கம் திருமக்கோட்டையில் பெண் பார்க்க வந்த போது ஜன்னல் வழியாக திரும்ப திரும்ப இரண்டு மூன்று தடவை எட்டிப் பார்த்து போது அவ அம்மாகூட ''என்னடி சக்கி யாராவது பெரியவங்க பார்க்கப் போறாங்க. அசிங்கம் இப்படி போய் பாக்காதடி அவனை'' என்று கடிந்து கொண்டான்.

ஏதோ பெரிய பீடிக் கம்பெனியில் வேலை பார்க்கிறானாம். எங்க பார்த்தால் என்ன? மாதம் ஐநூறு அறநூறு ரூபாய் சம்பளம் என்றார்கள். சம்பளமே, வாங்காவிட்டால்தான் என்ன என்று தோன்றியது அவளுக்கு.

அப்பா அம்மா இல்லை என்றார்கள். நல்லவேளை என்று தோன்றியது. அவளுக்கு. அவள் பார்த்த பல சினிமாக்களில் வருகிற கதாநாயகர்களை எல்லாம் பிசைந்து உருட்டியது போல உடம்பும் அரும்பு மீசையும் கருகருவென்ற சுருண்ட முடியும் உயர்ந்த தோள்களுமாய் அவளை மட்டும் அல்ல அன்றைக்கு வந்திருந்த எல்லோரையும் மயக்கினான் ரெங்கராஜன். இல்லாவிட்டால் இப்படி எல்லோருமே பைத்தியம் பிடித்தது போல் ஒரே மூச்சாக நின்று சகுந்தலாவைக் கட்டிக் கொடுத்திருப்பார்களா? முதல் மாசமே எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

''உங்களுக்கு என்னதாங்க வேலை''

''என்னா வேலையா இருந்தா என்னடி கண்ணா''

''எனக்கு பயமா இருக்குங்க''

''பயம் என்னத்துக்கடி, ஒனக்கு என்ன காசு கொடுக்கல்லியா? நீ கேட்ட புடவை வாங்கி தரலியா? ஒன்ன சினிமாவுக்கு கூட்டிப் போகலியா? இல்ல வேற எதுவும் மாட்டேனுட்டேனா, இல்ல இப்ப ஏதாவது வேணுமா.''

''எனக்கு பயமா இருக்குங்க''

''என்னடி பயம், ராத்திரி நேரங்கழிச்சி வாரேன் குடிக்கிறேன். ஒன்னும் இல்லை வேற ஏதாவது கெட்டப் பழக்கம் இருக்கா இல்ல என்னா. வீட்டுக்கு வர்ரேன்னு சொல்லமுடியாது'' என்றான்.

''எனக்கு இந்தப் பணம் வேணாங்க. நோட்டு, நோட்டா என் கையில கொண்ணாந்து தர்றீங்க, தந்துட்டு போய்றீங்க. அப்பறம் எப்ப வறீங்கன்னு தெரியாது. என்ன பன்றீங்க, என்ன செய்றீங்க, எதுவும் தெரியாது. எப்பானாச்சும் வர்றீங்க. வந்த உடனே விருந்து சினிமா, நாடகம்ன்னு இழுத்துகிட்டு கண்டபடி சுத்தி எல்லாத்தையும் வாங்கிப் போடுறீங்க. ராத்திரி பகலா வூட்டுக்குள்ள எம் மடியிலேயே கெடக்குறீங்க. திடீர்ன்னு நெனைப்பு எடுத்து ஓடுற காளையாட்டம் துள்ளிகிட்டு எப்படி வந்தீங்களோ அப்படி மறைஞ்சுடுவீங்க. கல்யாணம் ஆகி இந்த ஒரு ரெண்டு மாசத்துல ஏன் என்று தெரியாமலேயே மூனு வூட்ட மாத்திட்டீங்க. நான் ஏன்னு கேட்டேனா? ஒரு வீட்டுக்கு வந்தவுடன் எங்க அம்மாவுக்கு அட்ரஸு மாறிடுச்சும்மா அப்படின்னு எழுதி அது போய்யி சேர்ரதுக்குள்ள வாடி வேற வீட்டுக்குன்னு சாமான் எல்லாத்தையும் தூக்கிக்கிட்டு ரெண்டு புது வீடு மாத்திடுறீங்க. மூன்றுமாசத்துக்குள்ள இஞ்ச எனக்கு யாரெத் தெரியும். புதுசு வீட பாக்குறப்போ பயமா இருக்கு அத்தான்.''

''அம்மா வூட்டுக்கு எதுக்கு? எனக்கு என்னா புள்ளையா உண்டாகி இருக்கு. எனக்கு ஒங்கள வுட்டுட்டு எஞ்சயும் போக புடிக்கலெ. அன்னக்கி சட்டையை கட்டில்ல போட்டீங்க. அதுல நீளமா ரத்தக்கறை இருந்தது. 'என்னங்க இது' ன்னு கேட்டேன். 'ஒன்றும் இல்லே' ன்னீங்க. திரும்புங்கன்னன். திரும்பாமலேயே வேற சட்டையை மாட்டினீங்க. முதுக மறைச்சுகிட்டீங்க. பனியனுலயும் ரத்தக் கறை! புது சட்டை வழியாகவும் தெரிஞ்சுது. வயத்தக் கலக்குச்சு, என்ன பண்ணீட்டு வர்றீங்கன்னு, ஆம்பளைன்னா அடிதடி ரெண்டும் உண்டுதான். அடிகிடி படுகிறதுதான், வுட்டு தள்ளுன்னீங்க. அதுகப்பறம் வீட்டுக்கு வந்து சட்டையை அவுத்து போடுற வேலையையே வுட்டுட்டீங்க!! எப்பவாவது வருவீங்க, எப்பவோ போவீங்க! இதுக்கு இடையில ஒங்களுக்கு ஒரு பொண்டாட்டி! பேசுனா பதில் கெடையாது. கேட்டா மொகத்த பார்த்து பதில் பேசுறது இல்லெ. எல்லாத்துக்கும் ஒரு சிரிப்பு வெச்ருக்கீங்க. ஏங்க இப்படீன்னு கேட்டா கையைக் கோத்து அப்படியே கட்டிப்புடுச்சு ஆட்டுக்குட்டி தூக்கிக்கிற மாதிரி தூக்கிகிட்டுப் போயி மெத்தையில போட்டு நீங்களும் பொறண்டுக்கிறீங்க. கல்யாணம் ஆனதிலே இருந்து பகல்ல வேணாங்க வேணாங்கன்னு எத்தனையோ தடவை நான் சொல்லும் போது மாத்திரம், நான் ராத்திரி இருக்கமாட்டேன்டி அப்படின்னு சொல்லிட்டு மயக்கிபுடுவீங்க. ஆனா அப்பறம் ஏழுநாள் வீட்டுப் பக்கம் ஒங்க நெடிய பாக்க முடியாது. எட்டாவது நாள் வந்து பறக்க பறக்க கௌம்புடி கௌம்பு வூட்டுக்காரன் கிட்ட சொல்லிட்டேன். வேற வூடு மாத்துறோம் அப்படின்னு வாசல்ல லாரிகாரரோட நிப்பீங்க. திமுதிமுன்னு பத்து ஆளுங்க சாமானை எல்லாம் தூக்கி லாரியில போட - அண்டையில இருக்கிற யாருகிட்டயும் சொல்லிக்ககூட முடியாம - அதே லாரியில அவசர அவசரமாக என்னையும் தூக்கி ஏத்திட்டு நீங்களும் ஏறிக்குவிங்க! எதுக்கு இந்த அவசரம்?! எதுக்கு இங்கேருந்து அங்கே ஓடுறோம்?! எஞ்ச? எதுக்கு? ஏன் போறாம்ன்னு தெரியாம - திடீர்ன்னு ஒரு

வூட்டுலெ கொண்டு போயி என்னையும் சாமானையும் எறக்கி விட்டுவிடுவீங்க. நான் என்ன மனுஷியா, நானும் சாமான்தானே?''

''நிறுத்துடீ''

''எனக்கு பயமா இருக்கு. ஊருக்கு போய் அம்மாவோட தங்கச்சிங்களோட ரெண்டு நாள் இருந்துட்டு வருவோம் வாங்கன்னு நூறு தடவ கேட்டாச்சு! வேலை இருக்குங்கிறீங்க. அது என்ன வேலையோ? யாருக்குத் தெரியும்? கல்யாணத்துக்கு முன்னாடி தெரிஞ்சிருந்தா ஓடியே போயிருந்திருப்பேன்! இப்பக் கூட முடியலெயே? வூடு பூரா சாமானா வாங்கி போட்டுருக்கீங்க. இந்த சாமானோட நானும் ஒரு சாமானாய் ரொம்ப நாளைக்கி இருக்க மாட்டேன்னு தோணுதுங்க.''

''ஒனக்கு என்னா தாண்டீ வேணும்?''

''நீங்க வேணுங்க! எப்பவும் எந்த நேரத்திலேயும் வேணுங்க! வேற யாரும் வேணாங்க! வேற எதுவும் வேண்டாங்க! இந்த வீடு, வாசல், இந்த டீவி, இந்த சொத்து, எதுவும் வேண்டாம்.''

''நான்தான் இருக்கேனே''

''எஞ்ச இருக்கீங்க? எனக்கு தெரியலீங்க! நீங்க யாரு? எனக்குப் புரியலீங்க. இருட்டுக்குள்ள கட்டில்ல மட்டும்தாங்க. அதுவும் பத்து நிமிஷம் தாங்க ஒங்கள மனுஷனாத் தெரியும்! ஆளும் தோளும், மாருமா, ஒரு முரட்டு ஆம்பிளையைத் தெரியும். அதுவும் நெனைச்சு கெடக்குறப்ப வரமாட்டீங்க! அப்படியே வருவீங்க வருவீங்கன்னு காத்து காத்து பசி வெறியாகி பசியும் தூந்து போற நேரம் கண் அசந்து போயி நல்ல தூக்க வெளிச்சயில அப்படியே மயங்கிக் கெடக்குறப்போ நடு ராத்திரியில வந்து திடும்திடும்ன்னு வாசல் கதவு பெயர்ந்து வுழுவுற மாதிரி காலால கதவ ஒதைச்சு பதறிப் போயி ஏந்திரிச்சு நானு ஓடியார மாதிரி பண்ணுவீங்க. ஆரம்பத்துல அதுகூட நல்லாத்தான் இருந்தது. தூக்கம் கலைய முந்தி வாசல்ல இருந்தே தூக்கிகிட்டு வருவீங்களே இதுக்கு நம்ம மேல என்னா ஆசை பார்த்தியான்னு அப்பல்லாம் மாஞ்சு போவேன். முரட்டுத் தனமா அமுக்கி நீங்க பண்ணுற எல்லா ஆகத்தியமும் எனக்கு அப்பல்லாம் சரின்னுதான் தோணிச்சு. எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க. ஆனா ஒங்க மாரெ கட்டி கையைச் சுத்தி கழுத்தோட சேர்த்து அமுங்கும்போது ஒங்க இடுப்புல இருந்தோ, முதுகுல இருந்தோ, தொடையில இருந்தா, பிசுபிசுன்னு ஒட்டும் ரத்தம் ஏதுங்கன்னு கத்துவேன். இருட்டுல கூட அது என் கையில ஒழுகிற மாதிரி பயங்கரமாய் இருக்கும். இது எல்லாம் என்னங்க என்று கத்துவேன்.''

''ஒன்னும் இல்லெ ஸ்கூட்டருல, லேசா அடி, டாக்டருகிட்ட காட்டி ஊசி போட்டேன்''

''கட்டெக் காணுமேம்பேன்''

''கட்டு போட்டா காயம் ஆறி காயாதுன்னு கட்ட நானே அவுத்து எறிஞ்சுட்டேன்''

''வலிக்கிலியா அத்தான்? லைட்ட போடுறேன் காயத்த காட்டுங்களேன் பாக்குறேன்.''

''இப்ப அது எல்லாம் வேண்டாம். காலையிலேயே நான் போயிடுவேன். எப்ப வருவேன்னு சொல்ல முடியாது. அதனால கொஞ்சம் நேரம்தான். நாளைக்கி யாராவது நான் இல்லாதப்ப என்னை வந்து தேடினால் தெரியாதுனு சொல்லணும்.''

தெரியாதா உங்களை எனக்குத் தெரியாதா? ஆமாம் உங்களை எனக்குத் தெரியாதுதான்.

*

காலையில் இருந்தே அவளுக்குத் தலைவலி உடம்பெல்லாம் யாரோ சங்கிலியால் போட்டு இறுக்கியது போல் வலி. ரெங்கராஜன் வீட்டுக்கு வந்து பத்து நாளாச்சு. வீடு முழுவதும் வெறுமை. இந்த புது வீட்டுக்குக் குடி வந்து இருபது நாள்தான் ஆகிறது. வீடு என்னமோ பெரிய வீடுதான். ரெங்கராஜன் ஒவ்வொரு தடவையும் வீட்டை மாற்றுவதே ஒவ்வொரு காரியமும் அறிய முடியாமல் - புரியாமல் போவதற்குத்தானோ என்று அவளுக்குள்ளே பயம், புரண்டது. மேலிருந்த ஜன்னல் வழியே சதுரம் சதுரமான வெளிச்சம் அந்தப் பெரிய வீட்டிற்குள் இருட்டை அறுத்துக் கொண்டு, தரையில் சூரிய வளையங்களாய் பாட்டம் போட்டிருந்தன. காலையில் எப்போது விழித்தாள் என்று அவளுக்கே தெரியாது. நேற்று சாயங்காலம் தெருவில் போன உதிரி மல்லிகையை வாங்கி பாதி கட்டியதும் அவனுக்காகவே என்ற நினைவு வந்ததும் மேலும் கட்டாமல் அப்படியே ஈரத்துணியில் சுற்றி வைத்தாள். அது அங்கிருந்தே அவளைப் பார்த்து சிரித்தது.

அவன் யார்? பெயர்தான் தெரியும் ரெங்கராஜன். அவன் அப்பா அம்மா இரண்டு பேரும் இல்லை என்று சொன்னபோது இடைஞ்சல் இல்லை என்று நினைத்தாள் சகுந்தலா. அவன் யார்? யார் மகன், எவள் பெற்ற பிள்ளை? இவன் கையில் பிடித்துக் கொடுத்தார்கள். ஐந்து மாதமாக இவனைத் தெரியவில்லை. நன்றாகச் சிரிக்கிறான். அப்படி அவன் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆசை கூட அடித்துக் கொள்கிறது. சட்டை, பேண்ட் எல்லாவற்றையும் கழட்டி விட்டு இடுப்பு துண்டோடு அவன் பைப் அடியில் நின்று குளிக்கும் போது ஒளிந்துதான் பார்க்கிறாள். அவள் பார்ப்பதை அவனும் ஆசையோடுதான் பார்க்கிறான். ஆனால் அவனைத் தெரியவில்லை. அவன் இன்னுது என்று அறியமுடியவில்லை. கோபித்து அவன் மயிரைப் பிடித்து இரண்டு அறை வைத்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று சகுந்தலாவால் எண்ணிப் பாராமல் இருக்க முடியவில்லை. அவளுக்கு ஒரு வேலையும் விட்டுக் கொடுக்க மாட்டான். ரெங்கராஜன் ''குளித்த கையோட துணியெல்லாம் நீங்களே துவைக்கணுமா? அப்படியே போட்டுட்டு வாங்க. நான் என்னத்துக்கு இருக்கேனாம் இந்த வீட்டுல'' என்று சொல்லும்போதே சகுந்தலாவிற்கு அழுகை முட்டிக் கொண்டு வரும். அவன் காதிலேயே

வாங்கமாட்டான். சாப்பிட உட்காரும்போது அவனே டம்ளரில் தண்ணீர் மொண்டு வைத்துக் கொண்டு தட்டையும் எடுத்து வைத்துக் கொண்டுதான் உட்காருவான்.

''என்னங்க. இது நான் இங்கே எதுக்கு இருக்கேன், தட்டைக் கூட நீங்களேத்தான் எடுத்து வச்சுக்கணுமா? சோத்தையும் நீங்க போட்டு கொளம்பையும், நீங்களே ஊத்தி சாப்புட்டுடுங்களேன். அப்பறம் நான் இங்க ஒருத்தி எதுக்காம்''- என்பாள் லேசாக சிரித்துக் கொண்டே.

''அதுக்கென்ன நானே சாப்டுகிறேன்'' என்று சொல்லியபடி சாப்பிட்ட தட்டை அவனே எடுத்துக் கொண்டு போய் அலம்பி சமையல் பிறையில் பாத்திரங்களோடு அடுக்கி வைத்து விட்டுப்போகும் அவனை வெறியோடு ஓடி வந்து ''என்னங்க நீங்க'' என்று மட்டும்தான் அவளால் சொல்ல முடியும்.

அவன் யார் என்று அப்போதும் தெரிவதில்லை. அவன் வீட்டில் இருக்கும் நாட்கள் குறைவதினாலேயே, வேறு எந்த நினைவும் அவளுக்கும் இல்லாமல் ஆக்கிவிடுவான் அந்த பாவி. அனேகமாக அவன், வருவதும் போவதும் பெரும்பாலும் இரவிலும், நடு நிசியிலும்தான். இரவு வந்தால் தொடர்ந்து அவன் எங்கும் போக மாட்டான். ரெண்டு பேருக்கும் பேச நேரமிருக்காது. அவளுக்கு பதினாலு வயசு இருக்கும்போது சகுந்தலா ஊரில் ஒரு டெண்ட் கொட்டகை போட்டு சர்க்கஸ் வந்தது. அதில் ஒருவன் ஐநூறு கிலோ இரும்பு தட்டுகளை அடுக்கி இருபுறமுமாக மாட்டி குறுக்கு கம்பியின் மூலம் பளு தூக்கினான். எல்லோரும் அவன் உடம்பைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். கரளை கரளையான சதை சொன்னபடி கேட்டது. பலகை பலகையாக மாரும், முதுகும் சதையாலேயே இரும்பு சிலை போல் அமைந்திருந்தது. சகுந்தலா பயந்தாள்.

''அம்மாடீ! இப்படி இருந்தா மகா அசிங்கமா இருக்கு. பாற மாதிரி இப்படி ஒரு உடம்பு வேணுமா என்ன?'' என்றாள் சினேகிதிகளிடம். ஜெயா கேட்டாள்:

''ஏண்டீ ஒனக்கு புடிக்கலியா, நெஜமாச் சொல்லு ஒனக்கு இப்படி ஆம்பிள்ளை வேண்டாமா?''

''ச்சீ வெக்கங்கெட்டவளே'' என்றாள் சகுந்தலா.

''தொள தொளன்னு தொப்பையும் வயிறுமாய் ஒரு தொந்தி செட்டியாரப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கடீ'' என்றாள் ஜெயா கலீரென்று சிரிப்பொலியுடன்.

அந்த பயில்வான் உடம்பு சகுந்தலாவிற்கு அருவெறுப்பாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது இருட்டுக்குள்ளே ரெங்கராஜனின் உடம்பு அந்த பயில்வான் உடம்பைவிட பெரிது என்பதை நிஜமாக உணர்ந்தாள்.

''ஏன் அத்தான் நீங்க தனியா எட்டு பத்து கோழி, இருபது முப்பது முட்டை பருத்திப்பால் ஒருபடி எல்லாம் சாப்புடுறீங்களோ?! வீட்டுக்குள் வந்தாத்தான் ஒண்ணும் சாப்புட மாட்டேங்கிறீங்க. ஏன் இது?''

''ஏன் அப்படி கேக்குற? அது எல்லாம் ஒன்னும் வேண்டாம் எனக்கு''

''சின்ன புள்ளையில எனக்கு கண்டுகண்டா சதையும் ஒடம்புமா இருக்குற ஆளுவள பார்த்தாலே பயமா இருக்கும். ஆனால் அதுமாதிரி ஒரு பயில்வான் ஆளைத்தான்/கட்டிக்கப் போறேன்னு எனக்குத் தெரியாது''

''தெரிஞ்சிருந்தா மாட்டேனுருப்பியா?''

''எனக்கு ஒங்க உடம்பைத் தவிர வேற என்ன தெரியும்? அதுனால ஒங்க உடம்பு பூரா அப்படியே எனக்கு புரிஞ்சு போச்சு. வேற எதையும் நீங்க எனக்கு கொடுக்கவும் இல்ல''

''வேற எதுவும் உனக்கு வேண்டவும் வேண்டாம்'' என்றான் அவன்.

அவள் நிலைகுத்தி விழித்தாள்.

''நிஜமாத்தான் சொல்றீங்களா எனக்கு வேற ஒண்ணும் இல்லியா?'' என்று கூறியபடி அவனைப் பின்னிருந்தபடி இறுகத் தழுவிக் கொண்டாள் சகுந்தலா.

ஒருவித மூர்க்கத்தனமான வேகத்துடன் அவளை அப்படியே தூக்கி தன் மார்புடன் சேர்த்துக் கொண்டு இறுக்கிக் கொண்ட அவனிடம் தன் முழு உடலையும் கொடுத்து விட்டு மௌனமாய் அந்த வலிவும் பொலிவும் கொண்ட தேகத்தில் சிக்கி சிதைந்து போனதுபோல் ஒன்றாகிப் போனாள். வெகு நேரம் கழித்த பின்னரும் அவள் தெரிந்து கொண்டதில் ரெங்கராஜனின் அந்த உடம்பை மட்டுமே என்பது தெரிந்தபோது அவள் கண்களில் கலங்கிய கண்ணீர் அவன் தோள்களில் வடிய ஆரம்பித்தபோது, அதைப் பற்றி ஏதும் கவலைப்படாமல் அவளுடன் தொடர்ந்து பந்தயத்தில் மூழ்கி இருந்தான் ரெங்கராஜன்.

*

இது புதிய வீடு. எங்கும் சிமெண்டின் மணம்; ஒரு நாள் இரவு இரவோடு இரவாக பத்து இருபது ஆட்களுடன் சாமான்களை அள்ளிக் கொண்டு வந்து இன்னும் முழுசாக கட்டி முடிக்காத இந்த புதிய வீட்டில் குடியேற்றினான் ரெங்கராஜன். சில நாட்களாகவே அவள் ரெங்கராஜனுடன் வெளிப்படையாகவே மோதிக் கொண்டிருந்தாள். கத்தை கத்தையாக அவன் கொண்டு வந்து தரும் பணம். அவளை ரொம்ப பயமுறுத்தியது. அவன் உடம்பில் பல இடங்களில் காயங்கள் பயங்கரமான சிராய்ப்புகளும், ஊமை அடிகளும், கன்றிப்போன இங்களும் அவள். அடி வயிற்றையே கலக்கியது.

''என்னங்க இது யாருகிட்ட அடி வாங்கிகிட்டு வர்றீங்க. என்ன நடக்குது இஞ்ச''

''சும்மா ஒரு லேசா ஒரு மோதல், ஒரு பெறட்டல் அவ்வளவுதான்''

''அப்படின்னா''

''இது எல்லாம் ஒனக்கு எதுக்கு பீடிக் கம்பெனியில ஆளுங்களோட, ஒரு அடிபுடி, அடின்னா நாம அடி கொடுக்கணும், புடின்னா நாம வாங்கிக்கணும் ரெண்டும் உண்டு.''

''இதுதான் ஒங்க தொழிலா? இத்தனை நாளா எனக்குப் புரியலெ''

''சேச்சே எப்பவாது இப்படி நடக்குறது உண்டு''.

''வேண்டாங்க இனிமே நீங்க வெளியே போனா எப்ப வருவீங்க, அதுவரைக்கும் என்னால தூங்க முடியாது, சாப்பிட முடியாது, இருக்க முடியாது, ஏங்க இந்த பொழப்பு.''

''அது சக்கி! இனிமே நானு இதுல இருந்து வெளியே வரமுடியாது. ஒன்ன ஏமாத்திட்டேன்னு ஒனக்கு தோணும். ஆனா இப்படி நான் இல்லேன்னா எப்பயோ ரொம்ப நாளைக்கு முந்தியே என்னை தீர்த்திருப்பாங்க'' அவள் பதறிப்போனாள்.

''யாருங்க, யாருங்க. ஒங்கள தீர்த்திருப்பா?''

''யாரு வேணும்ன்னாலும்!! எலெக்ஷன் வந்தாத்தான் எல்லோரும் ரெண்டு கட்சியா பிரிவாங்க, கட்சி மாநாடு நடந்தா எனக்கு மௌசு ஜாஸ்த்தி, எந்த கட்சி ஜாஸ்த்தி காசு தர்ராங்களோ, அவங்க பக்கம் நானு போகணும். ஒங்கிட்ட இதை எல்லாம் சொன்னா பயத்திலேயே நீ செத்துருவே. ஆனா என்ன பண்றது. நீங்க யாரு? நீங்க யாரு? அப்படீன்னு நீ கேக்குறப்ப எல்லாம் நான் ஒரே வார்த்தையில பதில் சொல்ல எனக்குன்னு ஒரு வார்த்தையில்ல சொல்றதுக்கு! யாரு என்ன வேலை கொடுக்குறாங்க? யாரு முன்னால கொடுக்குறாங்க? அத வெச்சுத்தான் எனக்கு பேரு வரும். குண்டா, ரவுடி, அடியாள், ராம்போ, கில்லர் இப்படி எத்தனையோ பேருல ஒவ்வொரு அரசியல் கட்சியிலேயும் ஏராளமா பணம் கொடுத்து என்னை மாதிரி ஆளுங்கள தயார் பண்ணி வைச்சிருக்காங்க. முப்பத்தஞ்சு வயசு வரைக்கும் நான் முகம் பார்க்காம குத்தி தள்ளியிருக்கேன். நீ படிச்சவ நான் படிக்காதவன். ஆனா பேண்ட்டும், சூட்டும் போட்டா எல்லாரும் பெரிய மனுஷன்தான். முப்பத்தஞ்சாவது வயசு தாண்டின உடனே ஒருத்திய கல்யாணம் பண்ணிக்கனும்ன்னு ஆசை வந்தப்போ, எல்லாரும் சிரிச்சாங்க. ''எருமை மாடு மாதிரி ஒடம்ப வளர்த்து, கழுதை மாதிரி பொதி சுமந்து, காட்டு மாடு மாதிரி திரியிற ஒன்ன எவடா கட்டிக்குவா? போலீஸ்ல பதினேழு கொல கேசுல ஒம் பேரு இருக்கு. பகல்ல நீ எப்பவும் வாழ முடியாது வெளிச்சத்துல நீ ஒரு பொண்ணோட தெருவுல நடந்துகாட்டு பாக்குறோம்ன்னாங்க. அது உண்மைதான். எந்த பொண்ணும் என்னைச் கட்டிக்கத் தயாரா இல்லை. ஒரு பெண்ணைப் பார்க்கப் போனேன். யாரோ சொல்லியிருக்காங்க இவன் ஒரு கூண்டான்னு, அந்தப் பொண்ணு ஓடிப்போயி அன்னைக்கி ராத்திரியே கெணத்துல குதிச்சுடுச்சு. இப்போ நீ கேக்குறியே நீங்க யாரு, நீங்க யாருன்னு இதே கேள்வியை நானே கேட்டுக்கிட்டேன். எனக்கே பதில் தெரியல. இப்பக் கூட தெரியலெ. தெரியாது கொலை செஞ்சா கொலைக்காரனா? திருடுனா திருடனா? நாங்க வாழக் கூடாதா? நாங்களா கொல்றோம் கொல்ல வைக்கிறாங்க. திருட வைக்கிறாங்க, சாக வைக்கிறாங்க சாகுறோம். ஏய் இப்பக் கூட நாங்க பொணம்தான். தெரியுமா ஒனக்கு. எட்டு வயசுல என்னை இந்த வேலைக்கி ஒரு கில்லர்தான் தயாராக்கினான். நீ சொல்றீயே இது எல்லாம் தப்பூன்னு இது எல்லாம் தெரியிறதுக்கு முன்னாடியே நான் கொலை செய்ய ஆரம்பிச்சுட்டேன். எட்டு வயசுல நான் ஒரு போலீஸைக்

கொலை பண்ணினேன்! நம்ப முடியுதா ஒனக்கு! நீளமா ஒரு கத்தி. வெளி நாட்டுக் கத்தி 'ஸ்கிட்லட்'ன்னு பேரு. மாடிப்படி ஓரமா நின்ன அந்த போலீஸ் முதுகுல சொருகிட்டு ஓட வேண்டியதுதான் வேலை! ரொம்ப சுளுவு! என்னோட வாத்தியார் ஒரு சேட். எங்களுக்கு எல்லாம் பேரு இல்ல! ஆனா ஜாதி உண்டு! அப்பா அம்மா கிடையாது. கொஞ்சம் பேரு அடிதடிக்கி போவாங்க. கொஞ்சம் பேரு ரவுடித் தனத்துக்குப் போவாங்க. கொஞ்சம் பேரு கைகால் ஒடைக்கிறதுக்கு போவாங்க. நாங்க உயிரை எடுக்கப் போவோம்! இது எல்லாம் சரின்னும் தப்புன்னும் நானோ நீங்களோ ஒங்க கோர்ட்டோ - பேசவே முடியாது! ஏன்னா நீங்க கொலை செய்யிறது இல்லெ! நாங்க செய்வோம்! நாங்க மாட்டிக்குவோம்ன்னு எங்களுக்குத் தெரியும்! நாங்க செய்யிறது. தப்புன்னு ஒத்துக்கிட்டு நடு நடுங்கினா நான் கொலை செய்ய முடியாது. கத்தி ஓங்கினா கை அங்கேயே நின்னுடும். நான் செய்யிறது தப்புன்னா கூட இதுல இருந்து நான் தப்பிக்கனும்ன்னா வேற யாராவது ஒரு கில்லர் என்னைக் குத்தி கீழ விழத் தள்ளினால்தான் முடியும். ரொம்ப பேசிட்டேன் - சக்கி - ஒம் மேல எனக்கு ரொம்ப ஆசை. எனக்கு அத சொல்லத் தெரியாதுடி! ஆனா ஒனக்கு அது தெரியும். ரொம்ப நாளா 'நான் யாரு'ன்னு தவிக்கிறே. இப்ப சொல்லு ஒங்க அம்மா வூட்டுல கொண்டு வந்துவிட்டுடவா. ஒனக்கு நான் பண்ணின எல்லாம் தப்புன்னு சொல்லி அழுதுகிட்டே வேறு ஒரு வாழ்க்கையை பண்ணித்தர முடியாது. பகல்ல என்னை ஒங்க சட்டங்கள் விரட்டிக்கிட்டே இருக்கு. எட்டு வயசுக்கு முன்னாலேயே ஒங்க சட்டங்கள் என்னைக் கொன்னுடுச்சு. என்னைக் கொலை செஞ்ச ஒங்க சட்டங்களத்தான் நான் துரத்தி துரத்தி கொன்னுகிட்டு இருக்கேன். சட்டங்கள கொல்ல முடியுமா? அதனால தான் அதெ கையில வைச்சிருக்கிற மனுஷங்கள கொல்லுறேன். நான் யாருன்னு தெரியுதா சக்கி! இனிமே ஒனக்கு நிரந்தரமா விடுதலை.''

அவனையே சிவந்த கண்களோடு பார்த்துக் கொண்டிருந்த சகுந்தலா குப்புற கவிழ்ந்து உட்கார்ந்திருந்த சகுந்தலா முற்றத்து தூணோடு சேர்ந்து ஏங்கலடித்து அழலானாள். எதிரே முற்றத்தில் நின்ற கில்லர் ரெங்கராஜன் தன் கால்களை அகற்றி வைத்து அவளெயே பார்த்துக் கொண்டு நின்றான். அவளை ஆறுதல் சொல்ல முடியாது. தஞ்சாவூர் வரதராஜ பெருமாள் கோவில் பட்டர் ஒருவரின் பிராமண சந்தானமாக அவன் பிறந்ததை அவளுக்கு சொல்ல முடியாது. ரெண்டு பொண்டாட்டிக்காரனான பட்டருக்கு மூன்றாவது பெண்டாட்டியாக முத்தோஜியப்பா சந்தில் குடியிருந்த மராட்டிய டான்ஸ்காரி ராணுபாய் வீட்டிற்கு ஏன் போகிறார் என்று தெரியாமல் அப்பாவின் கையை ஆத்திரத்தில் கடித்துவிட்ட காரணத்திற்காக கோவில் மடப்பள்ளியில் காய்ந்து கொண்டிருந்த வடைச்சட்டி எண்ணெயில் அவன் கைகளைப் பிடித்து முக்கிவிட்ட தகப்பனார் ரங்காச்சாரியின் கொலையைப் பற்றி சகுந்தாலவிற்குச் சொல்ல முடியாது! கொட்டு கொட்டென்று கொட்டிய மழையில் அம்மா சாகக் கிடந்தபோது ரெண்டாவது பெண்டாட்டியும், மூணாவது பெண்டாட்டியும், வீட்டில் இருந்த வெண்கலப் பானையில் இருந்து பலகை வரை சட்டிப் பானை

வரை மழையில் நனைந்து கொண்டு ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு வீட்டில் உள்ள குழந்தைகள் அலற அவர் அவர் கைக்கு கிடைத்ததை எல்லாம் எடுத்துக் கொண்டு போனபோது, அம்மா வாயைப் பிளந்து கொண்டு பரலோகம் போயிருந்தாள் என்பதை எல்லோருமாக சேர்ந்து அவனைக் கொன்ற கொலையாக சகுந்தலாவிடம் கூறி புரிய வைக்க முடியுமா? ஒவ்வொருவராக அவனை விட்டு விலகி அவனைத் தன்னந்தனியாக்கி நடுத் தெருவில் பெரு வழியில் அவனை நிற்க வைத்ததைவிட பெரிய கொலை இருக்க முடியாது! சமுதாயம் அவனை என்றைக்கோ கொன்று விட்டது! உயிர் ஏதாவது மிச்சம் இருந்தால் அதற்கு காரணம் பசி என்ற ஒன்றுதான். பசி ஒன்று மட்டும் இல்லாமல் இருந்தால் அவன் நிஜமாகவே என்றைக்கோ பிணமாகி மண்ணுக்குள் போயிருப்பான். இதை எல்லாம் சகுந்தலாவுக்கு மட்டும் அல்ல அவனைத் துரத்தி வருகிறதே மனிதக் கூட்டம் அவர்களில் யாருக்கும் புரிய வைத்துவிட முடியாது. ஒன்னும் சாப்பிடாமல் இருந்தால் இளைத்துப் போவார்கள். ஆனால் ரெங்கராஜனின் உடம்பு வாகு வாடாதது, எப்போதும் வற்றாதது! சிறு குழந்தையாக இருக்கும்போதே வயதுக்கு மீறிய தடிமனும், அவனை ஒத்த குழந்தைகளுக்கு உடல் வாகும் உயரமும், பார்த்தவர் அஞ்சும் சதையும், மினுமினுவென்ற கொழுப்பு படர்ந்த மேனியும், இன்னும் சகுந்தலாவுக்குப் புரிய வைத்து விட முடியாது! ஒரு நாள் பட்டினி, இருநாள் பட்டினி என்றால் எல்லோருக்கும் விளங்கும். தஞ்சாவூரில் மழைகாலம் என்றால் அந்த காலத்தில் இருபத்தி எட்டு நாட்கள் தொடர்ந்து அடைமழை பொழியும். ஊர் முழுவதும் வெள்ளக் காடாகும். வீட்டில் ஒரு மணி அரிசி இருக்காது. தொடர்ந்து ரெண்டு வாரம் கொட்டும் மழையில் ஈரம் பூத்த தரையில் வெறும் உயிரோடு குழந்தைகளை வைத்துக் கொண்டு, அந்த ஐயங்கார் பெண்மணி அதுதான் அவன் தாயார் லோகாம்பாள் கொல்லையில் இருந்து மூங்கில் கொத்தை ஒன்றை அறுத்து அதை வேக வைத்து மூங்கில் குருத்தை சமையல் செய்து குழந்தைகளுக்குக் கொடுத்து தானும் தின்னு வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்தாள். ஒட்டி உலர்ந்த வயிற்றில் மூங்கில் குருத்து விளையாடியது. ஆனால் ரெங்கராஜன் மழையைப் பார்த்துக் கொண்டே உட்காந்து இருந்தான். சரியாக பதினெட்டு நாட்களாக அவன் எதுவும் சாப்பிடவில்லை! அம்மா கூப்பிட்டும் மூங்கில் குருத்து சாப்பிட அவன் போகவில்லை. அவனுக்குத் தெரியும் ஒரு கைப்பிடி சாப்பிட்டால் பசி தீயாய் வயிற்றுக்குள் கொடியோடி படரும் நெருப்பில் பொசுங்குவதை விட; எரிந்து போவதைவிட, அவிந்ததனால் மேல் கிடக்கலாம் வயிறு அமைதியாக கிடந்தது. பசி அவனைக் கூப்பிடவில்லை. அம்மா சொன்னாள்.

''கட்டயில போறவனே, என்னத்த திங்கலாம்ன்னு காத்திண்டு இருக்கே? எஞ்சியாவது போயி ஒழியண்டா! சனி! இருபது நா பட்டினி கெடந்தவன் மாதிரியா இருக்க? பாவி! பாவி! உருண்டு தெரண்டு. அப்படியே அசையாம நிக்கிறது பாரேன்! எங்கியாவது போயி தொலையேண்டா! ரெண்டு காசு சம்பாதிச்சிண்டு வர்றதுக்கு துப்பில்லையாடா நோக்கு? யாரெ முழுங்கலாம்ன்னு பாக்கிறே'' - என்று கத்தினாள்.

வீடு முழுவதும் ஒழுவுகிறது. வெளியே மழை பெய்யவில்லை. வீட்டிற்குள்ளே தான் மழை கொட்டுகிறது; எங்கு பார்த்தாலும் ஜலம்.பசி வேகம் காதைத் துளைக்கிறது. பசி வயிற்றில் எரிப்பதைத்தான் சகுந்தலா கேள்விபட்டிருப்பாள். பசி காதை குடைவது, பசி நெஞ்சில் அதிர்வது கடைசியாக உயிரைக் குடிப்பது, சகுந்தலா கேட்டுகூட தெரிந்திருக்க மாட்டாள்! இருபத்தி எட்டாவது நாள்! மழை நிற்கவில்லை. தொண்ணூறு வயது தாத்தா திண்ணையில் மல்லாந்து விட்டார். வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் குழந்தைகள் கைகால்களை அசைக்க முடியாமல் செத்துக் கிடந்தனர். அப்போதும் தரை எல்லாம் மழை ஓடிக்கிடந்தது. அம்மா லோகாம்பாள் முற்றத்தில் மழையில் விறைத்துக் கிடந்தாள். உயிர் இரவே கூட்டைவிட்டு கடந்திருந்தது. அப்போதும் அத்தனையும் கொலைகள் தான் என்று தெரிந்து கொண்டான் ரெங்கராஜன். தன்னை மட்டும் இவர்கள் யாரோ தப்பிக்க விட்டுவிட்ட ரகசியம் மட்டும் இன்றுவரை புரியாத புதிராகவே இருந்தது. பசியால் மரணம் என்பது லேசான விஷயம் அல்ல. வேறு எதனால் நேர்ந்தாலும் அது கொலை அல்ல சாவுதான்! பசியால் நேர்ந்தால் அது கொலைதான்! கொலை மட்டும் அல்ல படுகொலை!! என்று சகுந்தலாவிற்கு அவளால் சொல்ல முடியுமா, சொன்னாலும் அவளுக்குப் புரியுமா? முதலில் பசி பின்னர் வயிற்றில் தீ, அதன் பின் காடு எரிவதுபோல் உடம்பின் ஒன்பது வாசல்களிலும் தீ சரங்கள் பறக்கும், உடல் வியர்வையில் குளிக்கும். பின்னர் பசித் தீ வயிற்றில் அடங்கிவிடும். காதுகள் இரையும் விம்மென்று ஓங்கார ஓலம் கேட்கும். நெஞ்சு துடிப்பு கொஞ்சம் கொஞ்சமாக அந்த ஓசைக்குள் அடங்கும்போது உடம்பின் சத்து முழுவதும் வெளியேறும், உடம்பு உயிரை பிரிய முடியாமல் வெட்டி வாங்கும். கொட்டும் மழையில், இந்தப் பட்டினி விடாயை அந்த குடும்பம் முழுவதும், இரவு முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவித்து பஞ்ச பூதங்களில் கலந்து கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருந்ததை தானும் செத்துக் கொண்டே அனுபவித்த கோரத்தை எப்படி யாரிடம் சொல்ல முடியும் யாருக்கு விளங்க வைக்க முடியும். யாரும் ஒத்துக் கொள்ள வேண்டாம். சட்டம் சொல்கிறது. கொல்லாதே, சட்டம் சொல்கிறது திருடாதே, ஆனால் இந்த கொலைகளைச் சட்டம் ஏற்றுக் கொள்ளாது. எனவேதான் அன்று அந்த சாவின் விளிம்பில் அந்த வாடாத உடம்புடன் ரெங்கராஜன் சக்தியோடு போராடினான். பசி, அவனைக் கொலை செய்ய முடியவில்லை! வீடு முழுவதும் எட்டு ஒன்பது, பிணங்கள் மாறிக் கொண்டிருக்க, அங்கிருந்து ஏனென்று தெரியாமல் படி இறங்கி மழையில் கொலையில் இருந்து தப்பி ஓடினான் ரெங்கராஜன். அவனை இன்றுவரைத் துரத்தும் கொலை வெறியை அவன் யாரிடம் சொல்வான்.சகுந்தலாவிடமா? சகுந்தலாவிற்குப் புரியுமா? இரவு நீண்டு கொண்டிருந்தது. சகுந்தலா இன்னும் அழுகையை நிறுத்தவில்லை. அழுதுகொண்டே இருந்தாள். அவள் அழுவாள் தான். அழட்டும் அவர்களுக்குக் கொலைக்காரன் என்றால் பயம். தங்களை இவன் கொன்று விடுவானோ என்ற பயம். சகுந்தலாவை அவள் அம்மா வீட்டில் கொண்டு போய் பத்திரமாக இருந்து கொள்ளச் சொல்லிவிட

வேண்டியதுதான் பாதுகாப்பாக. ரெங்கராஜன்கூட வாழுவது எந்த பெண்ணுக்குமே நரகம்தான். ஒரு பெண்ணின் உறவு இத்தனை சந்தேகங்களுக்கு இடையில் எப்படி உறவாகும். அவளது கர்ப்பத்தில் ஒரு குழந்தையை ரெங்கராஜன் வைத்துவிட்டான் என்பது அதைவிட பெரிய கொலையாகவே அவர்கள் எல்லோருக்கும் தோன்றும். எப்போதும் தலைக்கு மேல் அவனைக் கொலை செய்ய சமுதாயத்தின் சட்ட கரங்களும், பாதுகாப்பின் விலங்குகளும், இருண்ட அந்தகார ஜெயில் கம்பிகளும், நீண்டு வந்து துரத்திக் கொண்டு இருக்கின்றன என்பதை ஒன்றும் அறியாத கிராமத்து புறாவான சகுந்தலாவிற்கு எப்படிச் சொல்ல முடியும். வாழ்க்கையில் முதல் முறையாக தன்னைக் கொலை செய்து கொண்டால் என்னவென்று தோன்றியது கில்லர் ரெங்கராஜனுக்கு. கில்லர் என்ற பெயர் முதல் முதலில் ஒரு கதர், அரசியல்காரர் அவனுக்குச் சொன்னார். அதுவரை அவனுக்குத் தெரியாது. அவனைத் தயார் செய்த, ஆண் பெயர் நமக்ராம்சேட். பூதாகரமாய் இருப்பார். வடக்கே பாஷை தெரியாத வெகுதூரம் அவனைக் கொண்டு போனவர் அவர்தான். அவர்தான் மனிதனின் உடம்பில் கத்தி எங்கே சுலபமாக இறங்கும், எந்த இடத்தில் கத்தியை தொட்டால் போதும். உயிர் உடலைவிட்டு வேகமாக வெளியேறும் இடம் எது, எந்த இடத்தில் லேசாக வெட்டினால் போதும். ரத்தம் நிற்காமல் வருவதற்கு எந்த இடத்தைக் கத்தியால் நறுக்க வேண்டும். கொலை எப்படி ஒரு சமுதாயத்தின் அத்தியாவசியமாக இருக்கிறது. கொலை செய்யாத சமூதாயமே எங்கும் இல்லை என்ற ரகசியங்களை எல்லாம் ரெங்கராஜனுக்குச் சொல்லிக் கொடுத்தவர் அவர்தான். அவர் வாழ்நாள் முழுவதும், யாரிடமும் சிக்கவே இல்லை. தடையங்களை ஒழிப்பது நம்மையே காட்டி கொடுக்கின்ற வேலை. பலவிதமான தடயங்களை உண்டாக்கிவிட்டுச் செல்வதுதான் கொலையாளியின் முக்கியத்திறன் என்பார் அவர். சாகும் வரை அவரை எந்த தர்ம நியாயங்களும் அலட்டவே இல்லை. ரெங்கராஜனை எட்டு வயதில் இருந்து தயாரித்தவர். அவர்தான் எப்போதும் விழிப்பாகவும் முரட்டுத்தனமாகவும் அதே நேரத்தில் மின்னல் வேகத்திலும் யாரும் உணராமல் ஒரு காரியத்தைச் செய்ய அவனைக் கொடூரமாகப் பழக்கினார். புலியை வேட்டையாட காரணம் எதுவும் வேண்டாம். அதுவாய் இருப்பது ஒன்றே போதும். நாயைக் கொல்ல நியாயங்கள் எதுவும் தேவை இல்லை. இப்போது வெறிபிடிக்காவிட்டாலும் நாளை அதற்கு வெறி பிடிக்கலாம் என்ற நியாயம் போதாதா அந்த நாயை அடித்துக் கொல்ல. திருடனுக்குத் தண்டனை வழங்கவேண்டுமேயானால் அவனிடம் திருட முடியுமா? ஏமாற்றுக்கு ஏமாற்றே தண்டனையாகுமா? வாழ்க்கையில் புழுக்களைப் பெரிய புழுக்கள் தின்கின்றன. சிறிய மீன்களைப், பெரிய மீன்கள் விழுங்குகின்றன. பூனை கூட தான் ஈன்ற குட்டியை எலும்புகளுடன் மென்று தின்கின்றது. மனிதனும் மனிதனைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுகிறான். ஒருவனை ஒருவன் பகைக்கிறான், மறுக்கிறான், திருடுகிறான், ஏமாற்றுகிறான். அதேபோல் கொலையும் செய்கிறான். நமக்கராம் சேட் ஒரு கூண்டா, அவர் ரெங்கராஜனை ஒரு துஷ்மன்னாக வடக்கே கல்கத்தாவின் இருண்ட தெருக்களில் கொலைக்குப்

பழக்கப்படுத்தியபோது அது இன்னது என்று கூட வெகு காலம் வரை ரெங்கராஜனுக்குத் தெரியாது. தெரியாது என்பதால் இன்றைக்கு சகுந்தலா அது சரி என்ற ஒத்துக் கொள்வாளா? எங்கு பார்த்தாலும் ஒரே மக்கள் கூட்டம். ஒரு வேளை சாப்பாட்டுக்கும் கூட தவிக்கிற பட்டினி பட்டாளம். கங்கைக் கரையில் கூடி நிற்கும் பெரும் கூட்டம் ஓயாத இரைச்சல், சாப்பாட்டுக்காக, தீனிக்காக அலையும் மிருகங்கள்! எங்கு பார்த்தாலும் ஈனக் குரல்கள்! புதிது புதிதாக தினமும் பிறக்கும் இலட்சக்கணக்கான இந்தியக் குழந்தைகள், ஆ ஒரு குழந்தையினிடத்தில் பதினாறு குழந்தைகள்! ஒரு வினாடிக்கு பதினாறு குழந்தைகள்! இந்த நூற்றாண்டு முடியும் முன் நூற்று எழுபது கோடி குழந்தைகள் பிறந்து கொலையுண்டு மாளும். இதை ரெங்கராஜனுக்கு சொன்னது சேட் நமக்கராம்! இந்த நூற்றாண்டு முடிய இன்னும் இருபது முப்பது ஆண்டுகள் மீதி இருக்கின்றன! ஆனால் இத்தனை கொலைகளுக்கும் காரணம் வேண்டாம்! ரெங்கராஜன் செய்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு மட்டும் 'கொலைக்காரணம்' தேவை! ரெங்கராஜன் அமைதியாக ஒரு வீட்டில் வாழக் கூடாது! ஒரு பெண்ணுடன் கலந்து சுகிக்க விடமாட்டார்கள்! அவனை நேசிக்கிற அந்தப் பெண்ணுக்கும் அவன் யார்? எது என்று தெரிய வேண்டும்! அவன் கொலைக்காரன்தான் என்றால் அவளும் இதோ அவனை விட்டுவிட்டு ஓடி விடுவாள். அவன் கொலையின் காரணத்தெப் பற்றி யாருக்கும் கவலை இல்லை! அவன்தான் செய்தான் என்கிற முடிவு போதும். அந்த கொலையை அவனுக்குப் பின்னால் இருந்து யார் தூண்டினார்கள்? எந்த அரசியல், எந்த எதிரியைப் பின்னிருந்து குத்த கில்லர் ரெங்கராஜனைப் பயன்படுத்திக் கொண்டது என்பது சகுந்தலாவிற்குத் தேவையில்லை! எந்த அழகிய பெண்ணை, எந்த இருட்டுக்கு, கொண்டு போய் எந்த அரசியல்வாதி, எந்த பெரும் பணக்காரன், எப்படி கற்பழித்த பின் எப்படிக் கொண்டு எங்கே எறிய கில்லர் ரெங்கராஜன் எப்படித் தேவைப்பட்டான் என்பது சகுந்தலாவிற்குத் தேவையில்லை! சகுந்தலாவைப் போன்ற லட்சக்கணக்கான பெண்களுக்கும் தேவையில்லை! கண்ணெதிரே நடக்கும் பயங்கரமான தீமைகளைக் கண்ணை மூடிக்கொண்டு தன் வீட்டு கதவை அடைத்துக் கொண்டு மூலையில் ஒளிந்து கொண்டு ஊமையாகிப் போவதுதான் சமுதாயம்! சமுதாயம் என்பது என்ன?! ரகசியமான கோழைத்தனம்! வாழ்வதற்காக எந்தக் கொலையும் செய்ய அஞ்சாத குரூரம்! சமுதாயம் ரகசியமான துன்மார்க்கம்! வெளிப்படையாக வாழ துணிவில்லாத கோழைகளின் இருட்டறை! அங்கோ சகுந்தலா அரும்பு மீசையும், மெல்லிய உடலும், சிவந்த நிறமும், நாகரீகமான உத்தியோகமும் நன்மைக்காக போராடும் (சினிமாவில் வருவது போன்ற) ஒரு கதாநாயகன் தான் தேவையாய் இருந்திருக்கிறது. கண்டதைத் தின்று இருட்டிலே அரசியல்வாதிகளுக்காக மனிதர்களைக் குத்தித் தள்ளி பணக்கார சமுதாயத் தலைவர்களுக்கும், சமுதாயத்தை வகுந்து பிரித்து வைத்திருக்கின்ற - ஜாதிய வெறியாளர்களுக்கும், மதங்களால் சமூகத்தை எப்போதும் கவிழ்த்துப் போட்டு பாளம் பாளமாக நேர் எதிரான உலகங்களையே கொலை வெறிக்குத் தயாராக்கி கொண்டிருக்கின்ற மத மேதாவிகளுக்கும் கில்லர் ரெங்கராஜன் போன்ற பல

ஆயுதங்கள் கொலைகளை நிகழ்த்த சட்டப்பூர்வமாக தேவையாக இருந்திருக்கிறது என்பதை சகுந்தலாவிற்கு மறைத்துத்தான் ஒரு குழந்தையை அவளுக்குள்ளே அவனால் விதைக்க முடிந்தது என்பதை எந்த சமுதாயமும் புரிந்து கொள்ளாது! எப்போதும் சாவு தலைக்கு மேல் காத்திருக்கும் போது அவனால் ஏதும் அமைதியாக செய்ய முடியுமா? குழந்தையை எடுத்துக் கொஞ்ச முடியுமா? மனைவியைப் பார்த்து சிரிக்க முடியுமா? பகலில் சகுந்தலா விரும்புகிற ஒரு கடைக்குப் போய் அவளோடு கடைச்சரக்குகள் வாங்கி அமைதியாக மீண்டு வந்து சேர முடியுமா? சுருங்கச் சொல்ல முடியுமானால் கில்லர் என்பவன் இந்த சமுதாயத்தில்தான் தேவைப்படுகிறான்! சகுந்தலாவைப் போன்ற பலப் பெண்களை அவன் திரும்பிக்கூட பார்த்ததே இல்லை.

தனக்கென்று எதையும், எங்கும் வைத்துக் கொள்ள முடியாதவன் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இருட்டுக்கு தள்ளப் படுகிறான். ஒரு நாள் ஒரு அரசியல் கூட்டக் கொலைக்குப் பின்னால் நிகழ்ந்த கலவரத்தில் போலீஸில் இருந்து தப்பி ஓடியபோது மன்னார்குடிக்குப் பக்கத்தில் இருந்த திருமக் கோட்டையில் ஒளிந்தபோது - அங்கிருந்த குளத்தில் தண்ணீருக்கு அடியில் ஒளிந்து கொண்டான் ரங்கராஜன். ஊரைச் சுற்றி, ஜீப்புகள் பறந்து புழுதியைக் கிளப்பின போதும் அவன் வெளியே வரவில்லை. அன்றைக்குச் செத்திருக்க வேண்டியவன்! மூச்சடக்க செய்த பிரயத்தனங்கள் எல்லாம் வீணாகி தண்ணீருக்கு அடியில் தாமரைத் தண்டின் வேர்களைப் பிடித்துக் கொண்டே குளத்து நீரை வயிறு முட்டக் குடித்து தண்ணீருக்கு மேல் வந்து மீண்டு மூன்று முறை உள்ளே போன உடலை ஜீப்பின் புழுதிக் கூட்டம் ஊரை விட்டு வெளியேறும் முன் ரெங்கராஜனின் தாமரை இலைக் கூட்டத்தின் இடையில் இருந்து கரையில் இழுத்துப் போட்டார்கள் ஒன்றும் அழியாத கிராமத்து ஜனங்கள். தண்ணீரைக் கக்கி வைத்தியரின் நைச்சியமும் ஒன்று சேர எழுந்து உட்கார்ந்த ரெங்கராஜனைச் சுற்றிலும், பெண்களின் கூட்டம். ஐயே பாவமே, என்கிற குசுகுசுப்புகள் மத்தியில் அந்த தாமரைப் பூவைப் பார்த்து கண் வியந்தான் அந்த கொலைக்காரன். அவளைப் பறித்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் தோன்றிய போதே அதுவும் ஒரு கொலைதான் என்று புரிந்தது. பெண்களின் கூட்டத்திடையே பலர் இந்தக் கொலைக்குத் தயாராக இருந்தார்கள். அவனைப் பார்த்து நிறைய பெண்கள் மகிழ்ந்தார்கள். என்றாலும், யாரும் நெருங்கி வந்து விடுவதாக இல்லை. பிரண்டை கொடிகளும் குத்துக் கள்ளிச் செடிகளும் புளிய மரக்காடுகளும் நிரம்பிய இந்த கிராமாந்தரங்களில் அந்த கிராமத்து ஜனங்களுக்கும் கூட தெரியாமல் ஒளிந்து அலைந்து அவன் தப்பி ஓடினான் என்பது அவனுக்கே வேதனையாக இருந்தது. அந்தக் கொலையை உடனே ரெங்கராஜன் செய்ய விரும்பவில்லை. அந்தத் தாமரைப் பூவை அவன் தன் காலடியில் போட்டு துவைக்க வேண்டாமோ என்றுதான் எண்ணினான். ஒரு அரசியல்வாதிக்காக தூக்கி வந்த ஒரு பெண்ணைக் கொலை செய்து உருத்தெரியாமல் ஆக்கும் வேலை அவனுக்குத் தரப்பட்டபோது, முதல் முறையாக தாமரைப் பூக்கள் எல்லாம் அவனைப் பயமுறுத்தின. அவன் அந்த வேலையை ஒப்புக் கொள்ளாமல்

மறுக்க முடியாது. அவன் வேலை அது. சமதர்மம் பேசும் சோஷலிச சிற்பியான அந்த அரசியல்வாதி அந்த 16 வயது பெண்ணைக் காதலித்தாராம். இப்போது அவளை விட்டுவிட்டால் அவள் அவரை, அவரது அரசியலை, அவரது சமூக நம்பிக்கைகளைப் பறக்கடித்து விடுவாள் என்பது அவரது பயமாம். அவளை விட்டு வைத்தால் அகாலத்தில் அவள் வயிற்றுக்குள் இருந்து குழந்தை ஒன்று எதிர்க்கட்சி கொடியுடன் வெளிவந்து அவரது கீர்த்தியைத் தொலைத்து ஓட்டுபெட்டியைக் காலியாக்கி விடும் என்பதுதான் அவரது பயம். எனவே கில்லர் ரெங்கராஜனிடம் அந்த கருக்கொண்ட தாமரைப் பூ ஒப்படைக்கப்பட்டது. ரெங்கராஜன் தாமரைப் பூவை திராவகத்தில் போட மறுத்தால் வேறு இரண்டு கொலைக்காரர்கள் உடனே நியமிக்கப்படுவார்கள் என்பது மார்ச் 31-ம் தேதி அவள் திராவகமாக கரைந்து அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலின் சாக்கடைக் குழாய்களின் வழியாக ஓடவிடப்படுவார்கள் என்பது கில்லர் ரெங்கராஜனுக்குத் தெரியும். கில்லர்கள் புது பிறவி எடுத்து வருவார்கள். வெளிப்படையாக தெரியாத உலகத்தில் அவர்கள் கொன்று குவிப்பார்கள். அப்படித்தான். விடியற்காலை நான்கு மணிக்கு அந்த ஹோட்டலின் பின் சந்து சாக்கடையில் முராடிக் ஆசிட் எனும் கொடூரமான திராவக மணம் எழும்பிய போது குடித்துக் கொண்டிருந்த சாயாவை வைத்துவிட்டு ஓடிப்போய் சாக்கடைச் சால்களை எட்டிப் பார்த்தபோது கையில் இருந்த டார்ச் விளக்கால் நெஞ்சம் பதைக்க அந்த தாமரைப் பூவைத் தேடியபோது, அந்த 16 வயது உடலும் அந்த அடர் ஹைட்ரோக்குளோரிக் அமிலத்தில் சதை சதையாக கரைந்து எலும்புகள் உருகி நீராகி சதையும் நிணமும் கொழுப்பும் அமிலத்தில் உள் ஆழ்ந்து போய் அவளது நீண்ட வார் கூந்தல் கூட இனம் காண முடியாமல் அமிலத்தால் தீயுண்டு சாக்கடையில் அவள் வயிற்றுச்சிசுவும் கரைந்து உருத் தெரியாமல் சாக்கடையின் பாசி பிடித்த சுவர்களும் பொசுங்கிப் புகைய, ஆவி குமிழிட்டு ஓடிக் கொண்டிருந்த பயங்கரம் கில்லர் ரெங்கராஜனைக் கண்களில் திகில் கொள்ள வைத்தது. அந்த ரகசியம் இந்த உலகம் இனி என்றைக்கும் நினைவு கொள்ள முடியாது. தாமரைப் பூவின் இதழ் ஒன்றைக் கூட காணோம். சாக்கடை நிறைய அவள் அமிலமாகி ஓடிக் கொண்டிருந்தாள். அமிலத்தின் வாசம் நாளைக் காலை வரைதான். பல சாக்கடைச் சால்களை அவள் கடக்கும்போது அமிலமும் நீர்த்து தாமரையும் நினைவற்றுப் போய்விடும்.

திடீர் என்று ஒரு நாள், அவனுடைய தாமரையை, ரெங்கராஜன் திருச்சியில் பார்த்தான். ஆச்சரியம்! அவளேதான்! சகுந்தலாவேதான். அதே ஐந்து நட்சத்திர ஹோட்டலில்தான் எதிரே இருந்த கமர்ஷியல் ஆபீஸில் வேலைக்கு வந்திருக்கிறாள். அவனால் தாங்க முடியவில்லை. யார் கை எங்கே நீளும், எங்கிருந்து யார் சுதந்திரமாய் மலர்ந்திருந்த மலர்களை யார் பறிப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியும். சகுந்தலா தினமும் பஸ்ஸில் வந்து கொண்டிருந்தாள். அவனால் விலகி இருக்க முடியவில்லை. நீண்ட அழுக்கு ஜீன்ஸ், தடியான தோலால் தைக்கப்பட்ட ஜாக்கெட், இடுப்பில் எப்போதும் நவீன ஆயுதங்கள் முதலியவைகளுடன் அலையும் அவன் தாமரைப் பூக்களிடம் போக முடியுமா, என்றாலும் தாமரைப் பூக்கள் ஓயாது

பறிக்கப்பட்டன. சட்டப்பூர்வமாக பறித்து கசக்கி கூழாக்கப்பட்டன. சட்டத்துக்குப் புறம்பே இருட்டில் தேடி புடுங்கப்பட்டன. அந்த மிக அழகான படித்த பணக்கார சக்தி மிக்க தைரியம் நிரம்பிய போராடிய மகரந்த தாமரைப் பூ கிரேஸியாவை முதன் முதலில் அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் திராவகத்தில் வீசச் சொல்லி அவனுக்குத் திட்டம் தந்த மாநில மந்திரி ஜெ.ஆ.வி. அவளை அவனுக்குக் காட்டியபோது ரெங்கராஜன் அசந்து போனான்.

பெண் இந்த கரிக்கட்டையிடம், எப்படி சிக்கிக் கொண்டாள் என்று வியந்தான். அவள் ஒரு தேவதை போல இருந்தும் கூட கில்லர் ரெங்கராஜனிடம் அவள் ஒப்படைக்கப்பட்ட போது முகம் சுளித்தான்.

“நோ! இந்த ஆள் வேண்டாம் நீங்க என்னை ஏமாத்த பாக்குறீங்க, ஹீ ஈஸ் லுக் (He is look) லைக்ய கூண்ட். நான் ஏமாறமாட்டேன். நீங்க என்னைக் கொல்ல முடியாது. என்னக் கொன்னாலும் ஒங்குழந்த ஒங்க மந்திரித் தனத்தை இந்த ஊருக்கு வெளில எடுத்துச் சொல்லும்”.

“ஓ கிரேஸியா, ஒரு குளியல் தொட்டி நிறைய ஒனக்காக முராடிக் ஆசிட் தயாராய் இருப்பது உனக்குத் தெரியுமா? நீ பாஞ்சாலி இல்லை. இப்போதெல்லாம் கொல்லுவதற்கு ரொம்ப நவீன முறைகள் அவதரித்து இருக்கின்றன. தாமரைப் பூவே உன்னை நான் காப்பாற்றுவேன். என்னை நம்பு” என்று ஓலமிட்டது மனசு.

“நான் வரலீங்க. நீங்க யாரோடயாவது போங்க” என்றான் ரெங்கராஜன்.

இப்போது மந்திரியின் கரகரத்த குரல் “நீ போடா, நான் பாத்துக்கிறேன்” என்று தேனாய் அவளிடம் குழைந்தது, “ப்ளீஸ், டார்லிங், டேக் இட் ஈஸி, இவன் வேண்டான்னா, வேற ரெண்டு பேர் இருக்காங்க. அவங்கள கொண்டு வந்து விடச் சொல்றேன்” மணியை அழுத்தினர் மந்திரி. மிக இதமான குளிர்பதனம் செய்யப்பட்ட அந்த அறைக்குள் நுழைந்த இரண்டு நபர்களைப் பார்த்தபடியே ரெங்கராஜன் வெளியேற வேண்டி வந்தது. அடுத்து நிகழப் போகும் காரியம் கிரேஸ்யாவுக்குத் தெரியாது! மயங்கிய நிலையில் சப்தம் எழாமல் அடித்துப் போடப்பட்ட கிரேஸியாவின் உடல் ஐந்து நட்சத்திர ஹோட்டலின் பாத்ரூம் அறையின் திராவகத் தொட்டிலில் அவளே அறியாமல் தூக்கிப் போடப்பட்டு கரைந்து குழாய்களில் திறந்து விடப்பட்டு, கீழே வந்தபோது சாக்கடைகள் அமிலத்தால் வெந்து புதைந்த போதுதான் ரெங்கராஜன் வெட்டுண்டு போனான்!

சகுந்தலாவைக் கார்கள் பின் தொடர்வதை லேசாக உணர்ந்த போதுதான் சகுந்தலாவை அவள் இயக்கங்களை நிறுத்த கல்யாண தரகர் மூலம் திருமக்கோட்டைக்கு ஆள் அனுப்பினான் ரங்கராஜன், என்றாலும் ரொம்பவும் பயந்தான் அவன். ஏனென்றால் அவனுக்குத் தெரியும். ஊரும் உலகும் அவனை எதற்கும் சம்மதிக்காது என்று. அவனுக்கு இன்று எதையும் கேட்க முடியாது என்று தெரியும். முதல் முறையாக தன்னையும் தன் வாழ்க்கையையும் நொந்து கொண்டான்! என்றாலும், அவன் அவளை விடுவதாக இல்லை.

அவளை அவன் விட்டுவிட்டால் புதிய அயல்நாட்டு கவாசுக்கி காருகளும் அமெரிக்க ஷெவர்லே காருகளும், அந்தத் தாமரையைச் சட்டப் பூர்வமாக துரத்தி வீழ்த்தி, திராவக குளியாடல் செய்து விடும். கொலைக்காரனுக்கு ஒரு தாமரைப் பூ எதற்கு? சூடிக் கொள்ளவா? அல்லது சூடி எறியவா? ப்ரோக்கர்கள் அவனிடம் இருந்து நிறைய பணத்தை வாங்கிக் கொண்டு பெண் பார்க்க வைத்தார்கள். போடப்பட்ட திட்டத்தில் சகுந்தலா மட்டும் கடைசி வரை ஏமாறவில்லை. ஒரு சாதாரண கல்யாண விஷயம் எப்போதும் ஒரு கொலையாகவே முடிகிறது. யார் எங்கே கொலை செய்யப்படுகிறார்கள் என்பதுதான் அதில் புதிர்! இங்கே ரெங்கராஜனுக்குத் தெரிந்தே இருந்தது. அவ்வளவுதான் வித்தியாசம்.

அனேகமாக அவளுக்குத் தன்னைப் பிடிக்காவிட்டால் என்ற பயம் இருந்தது. ஆனால் கொலையை கில்லர் செய்யவில்லை. அவள்தான் அவனைப் பிடித்ததாக கூறி கல்யாணத்துக்கு ஒப்புக்கொண்டு அவனைக் கொன்றாள்! ஆனால் அவன் குற்றுயிராய் ஆனான். அதுதான் நிகழ்ந்தது. அன்றிலிருந்து அவன் தொழிலில் இருந்து விலக நேர்ந்துவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அவன் அவளால் குற்றுயிர் ஆனான். குடும்பத்தில் அவன் மனம் கொண்டான். போலீஸ் அவனைப் பிடித்ததும் இன்னொரு கொலையைச் செய்யும் துணிவையும், தைரியத்தையும் இழந்தான். ஒவ்வொரு நாளும், தைரியத்தை மீட்டுக் கொள்ள ரெங்கராஜன் போராடினான். யாருக்கும் பயப்படாதவன். அவளை மீண்டும் வந்து சேர்வதற்காகவே பயந்து ஒளிந்தான். வீட்டுச் சோறும், சகுந்தலாவின் எங்கும் கிடைத்திராத பேராசையான அன்பும் அவனது கொடூரங்களிலிருந்து மீண்டு உள்ளிழுத்தன. அவன் மீளவே முடியாது என்று தெரிந்தும் அவளில் புதைந்து போனான். அவள் அவனை நம்பவில்லை. இருட்டு வந்ததும் அவளுடன் நெஞ்சத்தில் படர்ந்தபோது அவள் மயங்கிப் போனாள் என்றாலும், விழித்தபோது ''நீங்க யாருங்க?'' என்றாள். உலுக்கி எடுத்தாள். அவனுக்கென்றே ஒரே புகலிடம். அவள் மடிதான் என்பதை புரிந்து கொண்டிருந்தாலும், அவள் அவனை கூண்டில் நிறுத்தினாள். அவனைச் சந்தேகித்தாள். குறுக்கு விசாரணை செய்தாள். இதோ, கில்லர் ரெங்கராஜன் உடைந்து நொறுங்கிவிட்டான். இனி அவள் அவனை விட்டு அடிவானத்திற்கு அப்பால் வெகு தூரத்திற்குப் போய்விடுவாள். இனி அவளுடன் இருப்பது முடியாது. புதுப்புது வீடுகளும், புதுப்புது இடங்களும் தேடி ஓடும் வேலை இனி இல்லை. அவனுக்குப் பெண்தான் தேவை என்றால் அது நிச்சயமாக சகுந்தலா மட்டும்தான். ஆனால் சகுந்தலாவிற்கு அவன் நிச்சயம் தேவைதானா? இன்னும் நாலைந்து மாதங்களில் அவள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வரப்போகும் இன்னொரு ஆண் துணை வேறு சேர்ந்துவிடும். பெண்ணாக இருக்ககூடாது. ஆ!

முழங்காலைக் கட்டிக் கொண்டு அழுது கொண்டிருக்கும் அவளிடம் என்ன ஆறுதல் சொல்லி என்ன செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? தன்னைக் கொலை செய்த யாரை இந்த உலகம் விட்டு வைத்திருந்தது.

என்னைக் கொலை செய்த இவளை ஏன் விட வேண்டும். இது எல்லாம் கொலை இல்லை என்றும் மறுக்கும் இந்த சமூகத்தில் இதுவரை யாருக்கும் எந்த பதிலும் சொல்லாமல் எந்த விளக்கமும் தராமல் இஷ்டம் போல் சுற்றி வந்த என்னை இவளும் ஒரு கொலை செய்துவிட்டு என்னைக் கொலைக்காரன் என்று சொல்லிவிட்டுப் போகட்டும். ஆம் இவைகளிலிருந்து எல்லாம் இவளைத் தப்பிவிப்பது என் நோக்கமா என்ன? நன்றாக அழட்டும். தனக்காகவே அழட்டும். நாளைக் காலை அவளைக் கொண்டு போய் திருமக்கோட்டையில் விட்டுவிட்டால் அதற்குப் பின் மீண்டும் ஒரு மயானம். மூன்று நாளாய் அவன் எங்கும் போக முடியவில்லை. இடத்தையும் மாற்ற முடியவில்லை. வீட்டுக்குள்ளயே பதுங்கிக் கொள்கிறான். இரவிலும் பகலிலும் போலீஸ் சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கிறது. ஓயாது ஒழியாது ஜீப்புகள் துரத்துகின்றன. வெளியில் கால் வைத்து இறங்க முடியவில்லை. ஆண்டு கொண்டிருந்த அரசியல் கட்சியும் அதன் தலைவரும் தோற்றுப் போனார்கள். தோற்றுப் போனதால் அந்தக் கட்சி தொண்டர்களும் அனுதாபிகளான மக்களும், கூட்டம் கூட்டமாக போலீஸாரால் ரவுடி என்றும், கூண்ட் என்றும் ஐம்பத்தி ஒரு கேஸில் ஒவ்வொரு போலீஸ் டேசனுக்கும் கொண்டு செல்லப்பட்டு செம்மையாக அடித்து நொறுக்கப்பட்டார்கள். கட்சியின் தலைவர் தோல்வியின் சோகத்தில் ஒரு பிருமாண்டமான ஹோட்டலில், தேடி கண்டு பிடிக்க, ஆட்களை, ரவுடிகளை விரட்டிக் கொண்டிருந்தார். அவருக்குச் சோகம் சொல்லி முடியாது. கில்லர் ரெங்கராஜனைக் கடந்த இரண்டு வார காலமாகவே காணமுடியாத ஏமாற்றம். தேர்தலுக்கு முன் ரெண்டு நாட்களுக்கு முன்னால் ரெங்கராஜன் கிடைத்திருந்தால் எதிர்க் கட்சி வேட்பாளர்கள் மூன்று பேரையாவது தீர்த்திருக்கலாம். பதினைந்து பேரை பலாத்காரமாக, பயமுறுத்தி பின் வாங்க வைத்திருக்கலாம். ஐந்து பேரயையாவது தூக்கிச் சென்று ஒளித்து இருட்டடிப்பு செய்து தேர்தலில் இருந்து அனாமதேயமாக விலக்கி இருக்கலாம் ''எங்கே தொலைந்தான் இந்த நாய் கில்லர் ரங்கராஜன்?'' சமீபகாலமாகவே கில்லர் ரெங்கராஜன் அகப்படுவது சிரமமாகவே இருக்கிறது. கண்கள் சிவந்து கொண்டன அவருக்கு. இந்த ஹோட்டலின் மூலை அறை ஒன்றில் உட்கார்ந்து தேர்தலில் அடைந்த தோல்வியின் காரணங்களைப் பத்திரிக்கையாளர்களுக்கு உட்கார்ந்து புலம்ப வைத்துவிட்டானே ரெங்கராஜன். ரெங்கராஜனைத் தேடிப்போன ஆட்கள் கொண்டு வந்த செய்திகள் ஒன்றும் நம்பும்படியாக இல்லை. யாரோ ஒரு பெண் பின்னால் போனதாக மட்டும் எல்லோரும் சொல்கிறார்களாம். ரெங்கராஜனுக்குப் பெண் சகவாசம் கிடையாது. எப்பேர்பட்ட அழகிகளை எல்லாம் பத்திரமாக கொண்டு வந்து அவருக்குச் சேர்க்கிற வேலையைச் செய்திருக்கிறான். ஈவு இரக்கம் இல்லாதவன். பயம் என்பது அவன் அகராதியிலேயே இல்லை. போலீஸ் அவனை வாங்க முடியாது. எதிர்க்கட்சி ஆட்கள் ரெங்கராஜனை நாலு துண்டாக வெட்டக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அவனை விலை கொடுக்க முடியாது. அப்படியானால் ரெங்கராஜன் எங்கே? சல்லடை போட்டு சலிக்கிறார்கள். ஒவ்வொரு முகாம்களில் இருந்தும் தப்பி விடுகிறானாம். இந்த

தேர்தலே அவன் இல்லாமல் சுவாரசியம் இல்லாமல் போய் விட்டது. பத்து பேர் முக்கியமான ஆசாமிகள், பெரும் புள்ளிகள், பணக்காரர்கள் என்றைக்கும் அவனை வாங்க தயார் என்ற நிலையில் இருக்கிறான். எதிர்க் கட்சி ஜெயித்து விட்டாலும் ஆட்சி நடத்த கூட்டு தேவைப்படுகிறது. பயமுறுத்த ரவுடிகள் இருக்கிறார்கள். கூண்டாக்கள் பின்னால் நிற்கிறார்கள். ஒரு மாதிரி கட்சி உடன்பாடு ஏற்பட்டாலும், ஏராளமாகப் பணம் விளையாடி விடும் போல் இருக்கிறது.

முக்கியமான சிலரையாவது தீர்க்க வேண்டும். தேர்தல் கணக்கை அப்பறம் தீர்த்துக் கொள்ளலாம். எலக்ஷன் கணக்கை தீர்ப்பதற்கு வேறு கில்லர்கள் இல்லை. ரெங்கராஜனால் மட்டும்தான் முடியும். ஆனால் அவன் எங்கே? இங்கே என்ன நடக்கிறது, ரெங்கராஜன் அவ்வளவு புத்திசாலியாகி விட்டானா? அவருக்கு மதம் தலைக்கேறியது. என்ன பயங்கரம் ரெங்கராஜனைத் தீர்த்துவிட்டார்களா? எப்பேர்ப்பட்ட பயங்கரன் ரெங்கராஜன். அவனை மாதிரி ஒரு முரட்டு மிருகம் விளைவு எதைப் பற்றியும் கவலைப்படாமல் நெருப்பில் சாடி குதிக்கும் இன்னொரு கில்லர் உருவாவதற்கு இன்னொரு ஐம்பது வருடம் தேவை என்று தோன்றியது. கட்சி தலைவருக்குக், கணக்கில்லா டம்ளர்கள். விஸ்க்கியும் காக்டையிலும் குடித்து செயலற்று போயிருந்தார் முன்னாள் மந்தரி.

ரெங்கராஜன் பிடி கொடுக்கவே இல்லை. மூன்று நாட்களாக சகுந்தலா அழுகையை நிறுத்தவில்லை. யார் யாரோ வந்து கதவைத் தட்டிய போதெல்லாம் அவன் தான் போய் கதவை திறந்து பயத்துடன் ''ரங்கராஜனா அப்படி யாரும் இங்க இல்லீங்களே'' - என்று சொல்லிக் கொண்டிருந்தான். இனிமேல் இங்கிருக்க முடியாது. எதிர்கட்சி ஆட்களும் தேட ஆரம்பித்து இருக்கிறார்கள் என்று தெரிய ஆரம்பித்தது.

டீக்கடைகளில் இருந்து ரெங்கராஜனுக்கு ஆட்கள் வந்து செய்தி சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களையும் ரொம்ப நம்பமுடியாது. எந்த நேரத்தில் எது நடந்தது எப்படி புரளும் என்று கணக்கிட முடியவில்லை. சகுந்தலா ஒரே மூர்க்கமாக அழுது கொண்டிருந்தாள். பேய் ஒன்று அழுது தலைவிரி கோலமாக உட்கார்ந்து கொண்டு இருந்தது போல் இருந்தது. எது பேசினாலும் வாய் திறக்காமல் அழுது கொண்டே இருந்தாள். இவ்வளவு மூர்க்கத்தனமும் பிடிவாதமும் எங்கு வைத்திருந்தாள். பலமுறை கெஞ்சியும் பேசியும் பார்த்தான் ரெங்கராஜன். பயன் இல்லை. உசுப்பியும், கையைப் பிடித்து இழுத்தும் அடித்தும் அலைக்கழித்த போதும் அவள் சொன்ன ஒரே வார்த்தை -

''என்னைக்கொன்று தலெய முழுவுங்க'' என்பதுதான். ரெங்கராஜனுக்கு அறிமுகமான முதல் பெண் அவள்தான். ஏனென்றால் அவனது ஆறடி உயரமும் மூன்றடி அகலமுமான அவனது உடம்பு யாரையும் பயமுறுத்தாமல் விடாது. எந்த கூட்டத்திலும் தனியாக தெரியும் அவனது தேகம், பிடி கொடுக்காமல் தப்புகிற அவனது வேகம் போலீஸ் டிபார்மெண்டிலேயே

பிரசித்தம். பெண்கள் அவனைப் பார்த்ததும் நடுநடுங்கி பின்வாங்குவார்கள். ஆனாலும், அவன் மற்ற அவனது சகாக்களைப் போல பெண்களைத் தேடி போனவனே இல்லை. அவன் பார்த்த முதல் பெண் அவள் அம்மா லோகம்பாள். அவளில் இருந்து எந்த பெண்ணையும் அவன் ஆசைப்பட கற்கவில்லை. எப்போதும் மந்திரிகளின் தயவில்தான் அவன் தூங்கினான். சாப்பிட்டான். வாழ்ந்தான். பசி அவனைப் பேதலிக்க வைத்திருந்தது. எனவே அவன் எப்போதும் சாப்பிட்டான். சாப்பிடுவதற்காகவே கொலை செய்தான். குற்றுயிராக்கினான், பறித்து பிடிங்கினான். எல்லாவிதமான அக்கிரமங்களும் செய்தான். ஒரு நாள் அல்ல இரு நாள் அல்ல 18 நாள் பட்டினி அவனுக்கு என்றைக்கும் மறக்காது. அது பட்டினி கூட அல்ல கொலை. இப்போது சகுந்தலா திரும்பவே இல்லை. பேசவில்லை. என்னைக் கொல் என்கிறாள். சாவு அவளையும் நெருங்கிக் கொண்டிருக்கிறதா? மழையில் நனைந்த வீட்டில் வீடு முழுவதும் பட்டினியால் செத்து இறந்து கிடந்த தம்பி, தங்கைகள், முற்றத்தில் இறந்து கிடந்த தாய். அவர்களை விட்டுவிட்டு ஓடி வந்த அவன் சகுந்தலாவை மட்டும் ஏன் விட்டு விட்டு ஓட முடியவில்லை. கில்லர் ரெங்கராஜனுக்குத் தெரியும். ஒரு கொலைக்காரன் இன்னொருவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று. ஆனாலும் இது என்ன விதி. சகுந்தலாவை அவன் இதுவரை புரிந்து கொள்ளவில்லை என்றுதான் தோன்றியது. இனி சகுந்தலாவுடன் இருந்தால், ஒன்று கில்லர் ரெங்கராஜனைப் பிடித்து கொன்று விடுவார்கள். அல்லது கில்லர் ரெங்கராஜன் சகுந்தலாவைக் கொலை செய்ய வேண்டும். அதைதான் அவளும் செய்யச் சொல்கிறாள்.

இதுவரை கொலை செய்வதைப் பற்றி, அவன் சிந்தித்ததோ ஆராய்ந்ததோ கிடையாது. இரவு வெகு நேரம் ஆகிவிட்டிருந்தது. சுற்றிலும் ஒரே அமைதி, வீட்டின் உள் அறையில் இருந்து சன்னமாக சகுந்தலாவின் அழுகுரல் வந்து கொண்டிருந்தது. பெண்கள் அவளை நேசித்ததில்லை. அது அவனுக்குப் பழக்க மில்லை. பார்த்ததும் விலகி ஓடிய பெண்களிடையே சகுந்தலா அவனை எப்படி ஒத்துக் கொண்டாள் என்று தெரியவில்லை. பார்த்தவுடனேயே மற்ற பெண்களைப் போல காரித்துப்பிவிட்டு போய் இருந்தால் அவன் அவளைத் துரத்திக் கொண்டு போயிருக்க மாட்டான். இந்தச் சதியிலும் சிக்கி இருக்கமாட்டான். அவளுக்காக ஓடி ஓடி ஒளிந்திருக்க மாட்டான். பெண் என்பவள் சமுதாயத்தின் குறுக்கீடு. சமுதாயம் ஒப்புக் கொள்பவைகளைப் பத்திரமாக நிறைவேற்றும். தாய்மை அவனுக்குப் புரிவதில்லை. தன்னை பழிவாங்கி கொண்டிருக்கும் சமூகத்தை அவன் வேட்டையாடிக் கொண்டிருக்கிறான். அவனைக் கொலை செய்து பிணமாக்கி உலவ விட்டிருக்கும் இந்தச் சமூதாயத்தை ஒழிக்க அவனுக்கு வேறு என்ன வழி, அவன் தப்பமுடியாது என்றாலும் ஓர் நாள் அவன் இவைகளில் இருந்து நிரந்தரமாகவே விடுதலை பெற வேண்டியவன்தான். ஆனால் அவனை வீழ்த்தி விட்டாள் சகுந்தலா. அதோ அழுது கொண்டிருக்கிறாள். அவனுக்கு எந்த சிக்கலும் இல்லை. அவனைப் பிடிப்பார்கள்; அவள் மூலம் தன்னைப் பிடிப்பார்கள்.

இருபது வருட காலமாக அவன் எந்த வழக்கிலும் சிக்கியது இல்லை. இந்த சின்னப்பெண் அவனைப் பிடித்துக் கொடுத்து விடுவாள். எவ்வளவு நேரத்தில் அது நடக்கப் போகிறது என்பதுதான் கேள்வி. ஏனோ அவளை விட்டு விட்டு ஓட முடியாதபடி சிதிலமாகி இருந்தான் ரங்கராஜன். திடீர் என்று இனியும் இங்கு இருக்கக் கூடாது என்ற எண்ணம் எழுந்தபோது இன்னும் கட்டி முடிக்காத அந்த வீட்டின் வாசல் கதவுகளில் இரண்டு பேர் மோதும் சப்தமும் பூட்ஸ் காலின் பலத்த மிதியடி ஓசைகளும் கலக்க எழுந்தன. ஈரமான சுவர்கள் பலமாய் அதிர்ந்தன. அவ்வளவுதான். ரெங்கராஜனுக்கு உடம்புக்குள் இருந்து இன்னொரு பேய் எழும்பியது போல் இருந்தது. போட்டது போட்டபடி உள்ளே பாய்ந்தான் அப்போதும் அழுது கொண்டிருந்த அவளை அப்படியே வாரித் தூக்கினான். அப்படியே துவண்டு என்ன என்று கூட கேட்காமல் அழுதபடியே இருந்த அவளைத் தூக்கிக் கொண்டு புதிதாக கட்டப்பட்டு கொண்டிருக்கும் அந்த கட்டிடத்தின் மற்றொரு பகுதிக்கு இன்னும் பூசப்படாத செங்கற்கல்லின் மேல் கால் வைத்து ஏறி கட்டடங்களுக்காக கட்டப்பட்டிருந்த மூங்கில் சாரங்களின் வழியே சாய்ந்து ஏறினான் ரங்கராஜன். ஏறிக் கொண்டிருக்கும் பொழுதே இவளைத் தூக்கிச் செல்வது எவ்வளவு பாரமானது; சுலபமாக சிக்க வைப்பது எத்தனை அவசியமற்றது; போகிற வழியில் இவள் எதற்கு என்ற யோசனைகள் எல்லாம் எழும்பி எழும்பி குமிழ் உடைத்துக் கொண்டது. சாரங்களின் அடுத்த முனை வழியாக இடையில் ஒரு சந்து விட்டு அடுத்த மூங்கில் சாரத்துக்குத் தாவியபோது இரண்டு பேரின் கணத்தால் சாரத்தின் ஒரு பகுதி முறிந்து குறுக்காக வேகமாக கீழிறங்கியது. அவன் முகத்தை விளக்கு வெளிச்சம் காட்டியபோது அவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அந்தச் சாவின் வேளையிலும் தெருவில் போலீஸ்களின் ஜீப்புகள் குறுக்கே பாய்ந்து செல்வது இங்கிருந்து தெரிந்தது. குறுக்கில் விழுந்த சாரம் அப்படியே தொங்கியதால் இருவரும் அதே சாரத்தில் ஒருவரை ஒருவர் பற்றி சாரத்தோடு ஊசலாடினார்கள். சந்தின் குறுக்கில் இரு வீடுகளுக்கும் இடையில் இரண்டு சார வரிசைகளில் அவன் கால் வைத்து அவளையும் தூக்கிக் கொண்டு ஒரு மனித குரங்கு நான்கு கால்களாலும் பற்றி பற்றி தாவி செல்வதுபோல் அந்த நீண்ட சாரக்கட்டுகள் மூலமாய் அவளுடன் தாண்டி போய்க்கொண்டே இருந்தான். அவளைத் தூக்கிக் கொண்டு தாண்டிச் செல்வது, லேசாகத்தான் இருந்தது. காரணம் அவளும் அவனுடன் ஒன்றாகி அவளறியமாலேயே அவனைப் போலவே தாவிக் கொண்டிருந்தாள். மணலில் இருவரும் கீழே குதித்த போது ஆச்சரியமாக இருவரும் ஒருவரை ஒருவர் இறுக கட்டிக் கொண்டார்கள். அவள் கண்ணீர் அப்போதும் நனைத்துக் கொண்டிருந்தது. தெருவின் இருபுறமும், நிறைய கும்பல் கூடி போலீஸ்களும், கட்சிக்காரர்களுமாய் தேடிக் கொண்டிருக்க இருட்டில் எந்தப்புறம் போகலாம் என்று தயங்கி நின்றான் ரெங்கராஜன். தஞ்சாவூர் சாக்கடைகள் பெரியவை. மெயின் ரோடுகளில் உள்ளவை. மராட்டிய அரசர்கள் கட்டிய பெரிய சாக்கடைகள். அவளை மறுமுறையும் வாரி எடுத்தபடி சாக்கடையில் இறங்கினான் ரெங்கராஜன். வளைவு வளைவாக காமான் வளைவு வைத்து கட்டிய சாக்கடைக்குள்

அவளையும் தூக்கியபடி பதுங்கி பதுங்கி, ஆனால் வேகமாய் முன்னேறினான் அவன். பயத்தில் அவனை இறுக கட்டிக் கொண்டாள் அவள். வேகமாக முழங்கால் அளவு சாக்கடை நீரில் அவனது ஜீன்ஸ்கள் நனைய ஒரு குழந்தை போல் அவளைத் தூக்கியபடி கடந்தான் அவன். ரோட்டில் சாக்கடையின் குறுக்காக வந்த கட்டிடங்கள் அங்ரோச்மெண்ட் பாலங்கள் குறுக்கில் வந்த கம்பிகள் இவைகளை எல்லாம் இமைப் பொழுதில் கடந்ததை யாரும் காண முடியவில்லை. ரங்கராஜன் கால்களிலும் கைகளிலும் அவளின் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. இப்போது கீழ வீதியில் திருப்பிய சாக்கடை முனையில் இருட்டின் மறைவில் அவன் அவளோடு மேலேறினான். மின்னல் வெட்டும் நேரத்தில் அங்கிருந்து பஸ் ஸ்டாண்ட் திருப்பத்தில் பாய்ந்து அவளைக் கீழே இறக்கிவிட்டான். எதிரே வந்தது மன்னார்குடி பஸ். இப்பொழுதெல்லாம் இரவு முழுவதும் பஸ்தான். கையைக் குறுக்கில் வீசி பஸ்ஸை நிறுத்தினான் ரெங்கராஜன். பஸ் அவர்கள் அருகில் வந்து அவர்களை கடந்து நிற்க முனைந்தபோது பஸ்ஸின் நிழலில் அவளை இறுக கட்டி அணைத்து அவள் உதடுகளைக் கவ்வி முத்தமிட்டு அவள் காதுகளில் இமைக்கும் நேரத்தில் - ''ஒன்ன கொலை செய்யமாட்டேன். என்னை நானே கொலை செஞ்சிக்க முடியாது. எஞ்சியாவது இப்படியே இருப்பேன். இனிமே என்னோட இருந்தா ஒன்னையும் கொன்னுடுவாங்க. இந்தா காசு, ஒங்க அம்மா வீட்டுக்குப் போயி சந்தோஷமா இரு. என்னைத் தேடாதே, நான் இப்படியே யார் கையிலேயும், அம்புடாம கொலைக்காரனாத்தான் இருப்பேன். நீ போய்டு'' - என்று கூறியபடி அவள் கைகளில் நோட்டு கற்றைகளைத் திணித்தான். அவள் அப்படியே சிலைபோல் நின்றாள். பின்னால் வந்த பஸ் ஒன்றின் வெளிச்சத்தில் அவள் முகம் தெரிந்தது. ஆச்சரியமான அமைதியில் அது பொலிந்தது. முரட்டுத்தனமாக அவன் பிடியில் இருந்து அவள் விலகிக் கொள்ள விரும்பவில்லை என்பதுடன் பின்னால் வந்த பஸ்களின் ஹாரன் ஒலியும் வெளிச்சமும் அவர்கள் இருவரையுமே துரத்தின. பஸ்ஸை நிறுத்தியவர்கள் ஏன் ஏறவில்லை என்ற ஆச்சரியத்துடன் எட்டிப்பார்த்த கண்டக்டரின் வியப்போடு போலீஸ் ஜீப் ஒன்றின் இருபக்க தாக்கத்துடன் அங்கு நின்ற எல்லா போக்கு வரவு சாதனங்களும் தடை நேர்ந்ததால் ஹாரன் ஒலிகளும் எந்திரங்களின் பேரோசையுமாய் ரோடு கலகலத்து நிற்பதில் ஏற வந்த இருவரும் முன் வரிசையில் அவசரமாய் இருவருமே வியப்புடன் நாலுபுறமும் நோக்க பஸ் நகர்ந்து பறந்தது. தவிர்க்கவே முடியாத நெருக்கத்தில் அவர்கள் ஏறிக் கொண்டபின் விரைந்த பஸ் காரணமே இல்லாத வேகத்துடன் தங்களுக்காகவே பாய்வது போல் இருந்தது அவர்களுக்கு. டிக்கெட்டை வாங்கிய பின் ஜன்னல் ஓரமாக இருந்த அவள் அவனைப் பார்த்து, ''என்னை கொண்டு போய் எங்க அம்மா ஊட்டுல வுட்டுடாதீங்க, நான் அங்க நீங்க இல்லாம செத்துடுவேன். உங்கள விட்டுட்டு இனிமே எஞ்சியும் இருக்க முடியாது ஆமாம்!'' என்றாள் அவன் காதுகளில்.

''என்ன இனிமே உடமாட்டாங்க, போலீஸோ கட்சிக்காரங்களோ, இல்லேன்னா, எதிர்க்கட்சி ஆளுகளோ, யாராவது சொல்லப்போறது நிச்சயம்.

இனிமே என்னை மறந்துடு, வடுவூர்ல இல்லன்னா பஸ் நிக்கிற எங்கியாவது நான் எறங்கிடுவேன். கையில ஏராளமா பணம் இருக்கு இனிமே என்னத் தேடாதே. என்னோட ஒன்னெ சேத்துக்க முடியாது. அதுக்கு ஒன்னெக் கொன்னுடலாம்.''

''அதைச் செய்யுங்க மொதல்ல. நீங்க யாருன்னு தெரிஞ்சுடுச்சு. நீங்க கொலை செஞ்சதே இல்லீங்க. நீங்க யாரையும் எப்பவும் கொலை செஞ்சதே இல்லெ. இப்ப என்னையும் ஒங்களால கொலை செய்ய முடியாது. நீங்க எப்படி இருந்தாலும் நான் சரின்னு சொல்லமாட்டேன். ஒங்கள விட்டுட்டு என்னால போக முடியாது. இனிமே ஒங்களாலயும் பழையபடி போக முடியாது. யாரு வேணாலும் வரட்டும். ஒங்கள கொன்னா என்னையும் கொல்லட்டும், நீங்க செத்தா நானும் சாவேன். எனக்கு நீங்க யாருன்னு தெரியாமத்தான் பயந்துகிட்டு இருந்தேங்க. எனக்கு நீங்க யாருன்னு அப்படியே காட்டிட்டீங்க. நீங்க செய்யிறது செஞ்சது எல்லாம் தப்புன்னு யாரு வேணாலும் சொல்லிக்கிடட்டும் நீங்க என்னக் கொல்லல. கொல்ல மாட்டீங்க. ஒங்க மனசு பச்சப்புள்ளெ மாதிரி. ஒங்கள நான் விடமாட்டேன். யாருன்னு தெரிஞ்சப்பறம் என்னோட ஆம்பளை நீங்கன்னு புரிஞ்சப்பறமும் ஒங்கள யாருகிட்டயும் கொலையாக விடமாட்டேன் பார்த்துருவோங்க. சாவுறதுன்னா ஒன்றும் பெரிசு இல்லெ. ஒங்கள விட்டு ஒரு அடிகூட அந்தண்ட இந்தண்ட போக மாட்டேன். வயித்துப் புள்ளெ மேலெ ஆணையாச் சொல்றேன். போவணும்ன்னா சேந்தே போவோம். தனியா போற கதை எல்லாம் வேண்டாம்.''

''ஒன்னெ தொலைச்சுபுடுவானுவோடி''

''தொலைக்கட்டும்''

''என்னை குழி தோண்டி பொதைக்கப் போறானுவடீ''

''என்னையும் சேத்து பொதைக்கட்டும்''

''ஒன்னெ படிச்சவ, புத்திசாலின்னு நெனைச்சேன். ஒரு கொலைக்காரனோட ஒன்னால வாழ முடியாது. கொலைன்னா என்னன்னு தெரியுமா? ஒன்னு ரெண்டு கொலையா? நான் தப்பிக்கவே முடியாது. என்னைக்காவது ஒரு நாளு பதிலுக்கு பதில் என்னை மாட்டாம உடமாட்டானுங்க.''

''ஏங் அத்தான் நாளைக்கே நமக்கு சாவு வருதுன்னு இன்னைக்கே குழி வெட்டி எறங்கிட முடியுமா? நீங்கதான் எனக்கு வேணும் வேற ஒன்னும் வேணாம்.''

''பெரிய கண்ணகி, நளாயினின்னு நெனைப்பா உனக்கு. அர்த்தமில்லாம உளறாத.''

''கண்ணகி என்ன கிழிச்சா, கட்டுனவனோட ஒழுங்க இருந்தா அது பெரிய காரியமாக்கும். என்ன மாதிரி ஒங்களோட ஓட, நீங்க போற எடத்துல ஒங்களோட வாழ கண்ணகியால முடியுமா? நளாயினிதான் லாயக்கா?''

''ரொம்ப பேசுற! வேண்டாம், இப்படியே பேசுனியின்னா அடுத்த போலீஸ் ஸ்டேசன்லேயே நானே போய் சரண்டர் ஆயிடுவேன்.''

''போயேன்! அதே போலீஸ் ஸ்டேசன் வாசல்லேயே ஓங்கத்தியால் நானே குத்திகிட்டு சாவேன் - பார்த்தீங்களா?'' என்றபடி இடுப்பில் இருந்து மறைத்து வைத்திருந்த கத்தி ஒன்றை எடுத்துக் காட்டினாள். கத்தி ஒன்றை காட்டியதும் அவன் மட்டும் அல்ல கூட வந்த பயணிகள் கூட நடப்பது தெரியாமல் ஆயுதத்தை மட்டும் பார்த்து பயந்தார்கள்.

வெடுக்கென்று கத்திய பிடுங்கி உள்ளே மறைத்தான் ரங்கராஜன். பஸ் என்னும் பொது இடம் என்றும் பாராது அவளை இறுக கட்டிக்கொண்டு அழுந்தினான். காலை நேர பஸ்ஸானதால் கூட்டம் அதிகம் இல்லை. அவளும் வெட்கப்பட வில்லை. அவளுக்கும் போகும் வழி பழக்கமாகிவிட்டது. பஸ் போய்க் கொண்டிருந்தது. அவனுக்கு மகிழ்ச்சியை அடக்க முடியவில்லை. உடம்பு முழுவதும் பெருமிதம். இனி அவன் குற்றவாளி இல்லை. அவன் செய்த எல்லாவற்றையும் பூர்ணமாக சரி என்று சொல்லி அவனை ஊக்குவிக்கவும் இதோ அவனெதிரே ஒருத்தி! உயிர்கள் ஒன்றை ஒன்று நெருங்கி இறுகிக் கொண்டன. அவள் அப்படியே அவனது பிரதியாக இருப்பாள் என்று அவன் எண்ணவே இல்லை. இனி அவன் செய்த எந்த காரியத்திற்காகவும் அவன் வருந்தவே வேண்டியதில்லை. அவன் தவறுகள் யாவுமே இனி தப்பே இல்லை என்று உலகறிய சாட்சி சொல்வாள். இனி அவனை மீண்டும் வீழ்த்தவே முடியாது. படுகளத்தில் ஒப்பாரி ஏது, இனி அவனை யாரும் பிடிக்க முடியாது. பிடித்தாலும் அவனை ஒடுக்கி குற்றம் சொல்ல முடியாது. இனிமேல் பஸ்ஸில் பயணம் செய்ய முடியாது. உடம்பு சந்தோஷத்தில் உள்ளம் அதிர ஆரம்பித்தது.

''கண்டக்டர் வண்டியை நிறுத்துங்க''

''இங்க ஸ்டாப் இல்லெ, மன்னார்க்குடியில்ல டிக்கெட் வாங்கி இருக்க''

''நீ நிறுத்துய்யா, இங்க எறங்கணும் எறங்கிக்குறோம், நிறுத்து ஒடனே''

''என்னங்க இது! இங்க எறங்கச் சொல்றீங்க.''

''நீ தானே சொன்ன நீங்க போற எடம் நான் வருவேன்னு. இப்ப என்னமோ சொல்ற''

''நிறுத்தச் சொல்லுங்க இறங்றேனா இல்லையா பாருங்க'' - பஸ் நின்றது. அது ஏதோ வயற்புறம் - ஒரே இருட்டு. என்றாலும் தெற்கே விடிவெள்ளி தெரிந்தது. இருவரையும் இறக்கிவிட்டு பஸ் சீறி பறந்தது.

''என்னங்க இது இஞ்ச எறங்கி என்னாப் பண்றது''

''இனிமே இந்தப் பக்கம் போயிட்டே இருக்க முடியாது. மாட்டிடுவாங்க. வடக்கே எங்கியாவது கண்ணு காணாம போயிடணும். நம்ம பேரு ஊரு அடையாளம் தெரியாது அத்திராணகாடு எஞ்சியாவது மனுஷ பூண்டே இல்லாத ஒரு எடத்துக்கு போயிடுவோம்.'' அவள் கலகலவென்று சிரித்தாள் ''அப்படி ஒரு எடம் இருக்கா அத்தான்.''

''பின்ன இல்லையா? அங்கதான் யாரையும் நான் கொலை செய்ய வேண்டியிருக்காது, திருட வேண்டியிருக்காது, பொய் சொல்ல வேண்டியிருக்காது. நானும் நீயும் மட்டும்தான் அந்த எடத்துல இருப்போம்.''

''அதான் கேட்டேன் அப்படி ஒரு எடம் இருக்குமான்னு''

எங்கோ அந்த விடியற்காலை வேளையில் ஒரு இடி முழக்கம் கேட்டது. வடக்கு மூலை வானத்தில் கொடி கொடியாக மின்னல் வானத்தைப் பிளந்தது. வானத்தை கிழித்த மின்னல் வட மூலையில் இருந்து தெற்கு மூலை வரை கிளை கிளையாக கொடிவிட்டு படர்ந்தது மின்னல். மீண்டும் பேரிடி. மழைக்காற்று ஹோ வென்று சுருட்டியது.

''பயமா இல்லெ'' என்றாள் அவள்.

''நீ இருக்கும்போது எனக்கு என்ன பயம்'' என்று அவள் கைகளைக் கோர்த்துக் கொண்டான் ரெங்கராஜன்.

பின்னர் அந்த கைகளை இறுக பற்றிக் கொண்டான். வடக்கு நோக்கிய அந்த பாதையில் இருவரும் நடந்தார்கள். லேசாக மழை தூரத்தில் எங்கோ ஆரம்பித்தது. அந்தக் காலை நேரத்திலும் விரிவாக தெரிந்தது. அவர்கள் இருவரும் வெகுதூரம் போக வேண்டியிருந்தது. இந்த உலகங்களையெல்லாம்.

(வெளிவராதது)